நூலகம்



அமெரிக்கக் காங்கிரஸ் நூலகம்
வாஷிங்டன்



புத்தகப் பணி ஏடு

அக்டோபர் 1969. மலர் 4. இதழ் 2.



தரமான, உறுதியுள்ள, உழைக்கக் கூடிய

தானியக் களஞ்சியம்

கட்ட

சங்கர் சிமெண்ட்

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட் சென்னை-2. தொழிற்சாலைகள்: சங்கர் நகர், சங்கரி

Criterion ICT 2226 Ta

நூலகம்

ஆசிரியர் :
குயிலன்

மலர் 4 இதழ் 2

அக்டோபர் 1969

ஆண்டுச் சந்தா ரூபாய் ஒன்பது

கார்ட்டூன்

மாந்தருள் மாணிக்கம்
தலையங்கம்

நூலகப் பணியின் அடிப்படையில் நூலக இயல்
டாக்டர்.
எஸ். ஆர். ரங்கநாதன்

அமெரிக்கக் காங்கிரஸ் நூலகம்
'கருடாழ்வார்'

தி. ஜ. ர. சந்திப்பு
குண்டூசி கோபால்

வானதி பதிப்பகம்
வாசவன்

சங்கர குறுப்பு
மணவை முஸ்தபா

அலுவலகம்:
14, தணிகாசலம் செட்டி ரோடு,
தியாகராயநகர்,
சென்னை-17

தொலைபேசி எண் :
441970

NOOLAGAM
Library & Book Trade Monthly

Published by :
BIBLIOPOLE

14, Thanikachalam Chetty Road,
Madras-17
Annual Subscription Rs. 9.

பழைய புத்தகக் கடைக்காரர்: இதற்குமா போட்டி ?

மாந்தருள் மாணிக்கம்

அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா தேசமெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. காந்தியடிகளை மக்கள் மறக்கவில்லை, மறக்கவும் முடியாது என்பதற்கு இந்த விழாவில் மக்கள் காட்டும் மாபெரும் உற்சாகமே போதிய சான்றாகும். நமது தேசத்தில் எத்தனையோ அறிஞர்களும், தலைவர்களும் தோன்றி அறநெறி போதித்திருக்கின்றனர்; மக்களுக்கு வழிகாட்டியிருக்கின்றனர். மக்களுக்குப் போதிப்பதும், வழிகாட்டுவதும்சுலபம். சொன்னபடி தானே நடந்து காட்டுவது தான் கஷ்டம். இதைச் செய்தவர் மகாத்மா காந்தி ஒருவர்தான். அதனால் தான் அவர் மக்கள் மனத்தில் நீங்காத இடம் பெற்றிருக்கிறார். அவருடைய நூல்களைப் படித்து, ஓரளவாவது அதன்படி நடந்து கொள்ள முயற்சிப்பதுதான், அவருக்கு நாம் தெரிவிக்கும் மரியாதையும், பக்தியும், நன்றியுணர்ச்சியுமாகும்.

மகாத்மாவின் மனம் கவர்ந்த நூல்

இரயில் பயணத்தின் போது, ஜான் இரஸ்கின் (1819-1900) எழுதிய ''முழுநலம்'' (Unto This Last) என்னும் நூலைப் படிக்கும் வாய்ப்புப் பெற்றேன். அதை விரித்த பினனர் கீழே வைக்கவே முடியவில்லை. இந்த அரிய நூலில் என் உறுதிப் பாடுகளில் சிலமிளிர் வதைக் கண்டேன். எனவே தான், அது என்னை அவ்வளவு கவர்ந்தது. மனித உள்ளத்தில் பொதிந்து கிடக்கும் நல்லவற்றை வெளிப்படச் செய்பவனே கவி ஞனுவான். கவிஞர்கள், எல்லோ ரையும் ஒரே மாதிரி உணர்ச்சி யுறச் செய்வதில்லை. ஏனெனில் எல்லோரும் ஒரே மாதிரியான நிலையில் வளர்ந்திருப்பதில்லை.

முழு நலம் என்னும் நூலில் இருந்து நான் அறிந்து கொண் டவை:

1) தனிப்பட்ட ஒருவரின் நலம் எல்லோருடைய நலத்திலும் அடங்கியுள்ளது.

2) வழக்குரைஞன் வேலைக்கும் நாவிதன் வேலைக்கும் மதிப்பு ஒன்றே. ஏனெனில் ஒவ்வொரு வருக்கும் தங்கள் உழைப்பின் மூலம் வாழ்க்கையை நடத்திச் சம்பாதிக்கச் சம உரிமை உண்டு.

3) உழைப்பை அடிப்படை யாகக் கொண்ட வாழ்க்கையே வாழத் தகுந்த வாழ்க்கையாகும்.

இவற்றில் முதலில் உள்ளது எனக்கு முன்னரே தெரியும். இரண்டாவதை மங்கலாக உணர்ந்திருந்தேன். மூன்ருவது எனக்குப் புலப்படவே இல்லை. இரண்டாவதும் மூன்ருவதும் முதலாவதில் அடங்கியுள்ளது என்பதை ''முழு நலம்'' என்ற நூல் எனக்கு உணர்த்தியது. இக் கொள்கைகளை வாழ்க்கையில் கடை பிடிக்கும் உறுதியோடு துயில் எழுந்தேன்.

—காந்தியடிகள்

நவம்பர் மாதம்
நூலகம் சிறப்பிதழ்

1969 நவம்பரில் நூலகம் அதிகப் பக்கங்கள், படங்கள், சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை களுடன் சிறப்பிதழாக வெளி வருகிறது, பரிசுபெறும் கடிதமும் சிறப்பிதழில் வெளிவரும்.

நூலகப்பணி அடிப்படையில் நூலக இயல்

டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன்
தமிழில்: பா. பெருமாள் B. A., BLib. Sc.,

இந்தியாவில் நூலகத் தொழில்

நூலகக் கல்வி

புத்தகத்தின் முதுகுப் பக்கத்தில் காணும் நூலின் பெயர், ஆசிரியர் பெயர் ஆகியவற்றை மட்டும் படிக்கத் தெரிந்திருக்கக் கூடிய அட்டண்டர்களையும், நூலக உணர்வும், சேவை மனப்பான்மையும் சிறிதுமில்லாத புதிய இளம் பட்டதாரிகளையும், நூலகத்தைப் பார்த்துக்கொள்ளவும், கேட்கும் புத்தகங்களை கொடுத்து வாங்கவும் நூலகர்களாக நியமித்து வந்த காலம் ஒன்று உண்டு. இத்தகைய நூலகர் நியமனங்களால், நல்ல தரமான நூலகப் பணி கிடைக்கவழியில்லை: பயனும் ஏதுமில்லை என இப்போது உணர்ந்துள்ளோம்.

உயர்ந்த அறிவுத் திறனும், பொதுக் கல்வியறிவும், இவைகளில் புலமையும் நுண்ணறிவும் மிக்கவர்களையே நூலகர்களாக நியமிக்க வேண்டிய கட்டாய நிலை இன்று உருவாகி விட்டது.

நூலகக் கல்வி மட்டும் சிறப்பாக இருந்தால் போதுமா? நூலகத்தில் நேரிடைசெய்முறை பயிற்சியும் மிக்க அவசியமானதாகக் கருதப்படவேண்டும். ஆகவே நல்ல தரமான நூலகக் கல்வியும் பயிற்சியும் அளிக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில்—சென்னையில் 1929ல் சென்னைப் புத்தகாலய பிரசார சங்கத்தாரால் நவீன முறைப் பாடத்திட்டங்களுடன் கூடிய நூலகப்பள்ளி துவக்கப் பட்டது.

இன்று, சென்னைப் பல்கலைக் கழகம், பட்ட மேற்படிப்பு நிலை

யில், அந்நூலகக் கல்வியை வளர்த்தும்,பரப்பியும் வருகிறது. பட்ட மேற்படிப்புப் பட்டமும் தந்து வருகிறது. இது பாரத நாட்டின் மிகச் சிறந்த நூலகப் பள்ளிகளில் ஒன்ருகும்.

போதன முறைகள்

நூலக வியல் கல்வி பல பாடப் பிரிவுகளைக் கொண்டதாகும். நல்ல நூலகக் கல்வியைப் போதிப்பதற்கு, இந்தியா, குறிப்பாக தமிழ்நாடு இருவழித் திட்ட உத்தியை உருவாக்கியுள்ளது.

நூலக இயலின் ஐந்து விதிகள் (Five laws of library science) அடிக் கோள்கள் (Postulates), சூத்திரங்கள் (Canons), மூலக் கோட்பாடுகள், (Principles) ஆகிய தத்துவங்களின் அடிப்படையில் நூலகக் கல்வியை போதிப்பது ஒரு முறையாகும்.

நூலகச் சேவை நடைமுறைகளை கவனித்துணருதல், நூலகப் பணிகளை நடைமுறையில் செய்து பார்ப்பது, நூல் அறையில் வாசகருக்கு உதவி செய்து அனுபவம் பெறுதல், தகவல் திரட்டித்தரும் பணியில் கையாள வேண்டிய வழிமுறைக் குறிப்புகள் அறிதல், ஆகியவைகளின் மூலம் 'செய்முறை அனுபவம்' பெறுவது, மற்ருெரு முறையாகும்.

மேற் சொன்ன இரண்டுமே, தக்க விதத்தில் இணைக்கப்பட்டு இரு வழித்திட்ட நூலகவியல் போதனமுறை என அழைக்கப்படுகிறது.

குறைந்தபட்சம், இரு நூலகப் பகுப்பு முறைகளையாவதுகற்பது, இரு நூலகப் பட்டியல் விதிமுறைகளை அறிவது, இரண்டிற்கும் மேற்பட்ட நூலகச் சட்டங்களை ஒப்பு நோக்கி ஆராய்வது ஆகியவை, மிகச் சில பாடச் சொற்பொழிவுகளின் மூலமாகவே போதிப்பது அவசியம். ஆசிரியரே சொற்பொழிவுசெய்வதைத் தவிர்க்க வேண்டும். நோட்ஸ் தருவதை கைவிட வேண்டும். உருப்போடும் முறையை விட்டுவிட வேண்டும். சுயமாகவே கற்றுக் கொள்ளும் மனேபாவத்தை வளர்க்க வேண்டும்.

வகுப்பறையில் கலந்துரையாடல், சிறு சிறு குழுவாகப் பிரிந்து ஆழ்ந்த முறையில் விவாதித்தல், தனி முறையில் போதித்தல், கட்டுரைகள்வரைதல்,வாராந்திர உரையாடல் நிகழ்த்துதல், வருடாந்திரக் கருத்தரங்கம் நடத்துதல் ஆகியவை நூலக ஆசிரியர் மேற்பார்வையிலும், அவர் பொறுப்பிலும் துணையுடனும், நூலகக் கல்வி போதனை முறைகளாக அமைய வேண்டும்.

மனித வர்க்கத்தின் அறிவு வளர்ச்சிக்கு நூலகப் பணிஅவசியமானதென இன்று அனைவரும் உணர்ந்துவிட்டனர். ஆகவே தொழிற் கல்வியாகிய நூலகக் கல்வியும் அதன் போதனை முறைகளும் நூலகப் பணி அடிப்படையில் அமைய வேண்டும்.

இந்தியாவில் நூலகப் பள்ளிகள்

இந்தியாவிலுள்ள பெரும்பாலான பல்கலைக் கழகங்கள் நடத்தும் நூலகக் கல்வி பட்டமேற்படிப்பு மேற்சொன்ன இரு வழித் திட்ட பாடப் போதனை முறைகளையே கடைப்பிடிக்கின்றன.

பெங்களூரிலுள்ள டாகுமெண்டேஷன் ரிசர்ச் அண்டு டிரெயினிங்சென்டர் இத்துறையில் முன்னேடியாக விளங்குகிறது. இக்கழகம் நூலகக் கல்வி போதனை

முறையை சிறப்பாக வளர்க்க, தொடர்ந்து சோதனைகளை நடத்தி, பயனுள்ள மாறுதல்களை தோற்றுவித்து வருகிறது. இக் கழக ஆசிரியர்கள் நமது மதிப்புக்கும் பாராட்டுக்கும் உரியவர்களாவர். ஆகவே இங்கு தொழிற் கல்வியான நூலகக் கல்வி மிகத் தரமானதாகவும், சிறந்ததாகவும் இருக்க, தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலை நாடுகளில் இந்திய நூலகக் கல்வி முறை

மேலை நாடுகளில், இந்திய நூலகக் கல்வி போதனை முறை, பயன்மிக்க மாற்றங்களை விளைவித்துள்ளது. இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகளிலுள்ள இன்றைய இளம் தலைமுறையைச் சார்ந்த நூலகவியல் கல்வி ஆசிரியர்கள் இந்திய போதனை முறைகளைக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள பல நூலகப் பள்ளிகளில் நூலக இயலின் ஐந்து விதிகள் பற்றி மிக விரிவாக அறிந்துள்ளனர். அவற்றின் சக்தியையும் உணர்ந்துள்ளனர். அவை நூலக இயல் மாணவர்களின் சிந்தனையை வளர்த்து, உற்சாகமான நூலகப் பணியை மேற்கொள்ளத் தூண்டியுள்ளது.

நூலகப் பகுப்பு முறைகளின் நிறைகளையும், குறைகளையும் ஆராய்ந்துணர, இந்திய போதனை முறையும், கோலன் பகுப்பு முறையும் பெரிதும் பயன்பட்டுள்ளன. மேலை நாடுகளிலே கோலன் பகுப்பு முறையின் சிறப்பியல்புகள் வெகுவாகப் பரவியுள்ளன. பாராட்டப்படுகின்றன.

முன்னேற்றமும், தடைமுயற்சியும்

இந்தியப் பல்கலைக் கழகப் பண உதவிக் கமிஷனின் தலைவர் டாக்டர் சி. டி. தேஷ்முக் அவர்கள் காலத்தில், இந்தியாவில் நூலக இயல் கல்வி விரைந்து வளர மனமார வாழ்த்தி, ஆதரவை நல்கினார். அதனால் நன்கு வளர்ந்து வருகிறது. இத்தகைய வளர்ச்சியை தடை செய்ய, இப்போது இந்திய நூலகத் துறையைச் சார்ந்தவர்களே, முயற்சி செய்து வருகிறார்கள் என்ற செய்தியை

129 ஆண்டுகளாக
புகழ்மிக்க சேவை செய்துவருவோர்

வி. பெருமாள் செட்டி & சன்ஸ்

பிரபல ஸ்டேஷனரி & காகித வியாபாரிகள்
3, ஸ்டிரிங்கர்ஸ் தெரு, சென்னை-1
&
L. I. C. பில்டிங்ஸ், சென்னை-2.

கல்வி நிலையங்கள்

பாடசாலைகளும், கல்லூரிகளும் தொழிற்சாலைகள். அங்கே சிறந்த பண்பு வாய்ந்த மனிதத்தன்மை என்னும் அரியபொருள் உற்பத்தி செய்யப்படுகிறது.

—காந்தியடிகள்

கேட்கும்போது, மனம் மிகுந்த வேதனைப் படுகிறது.

இத்தகைய முயற்சி பற்றிய செய்தி உண்மையாகி விடக் கூடாது என பெரிதும் விரும்புகிறேன். கடந்த ஐம்பது ஆண்டுகளாக இந்தியாவில் நூலகக் கல்வியும், நூலகத் தொழிலும் பெற்றுள்ள முறையான நல்ல வளர்ச்சியும், தரமான போதனை, சேவை முறைகளும், உலகில் நன் மதிப்பைத் தேடித் தந்துள்ளது. இத்தகைய சிறப்பைக் குலைக்க, குறைக்க, சிலர் முயற்சி செய்வது வேதனையைத் தருகிறது.

நல்லவை செய்தல் ஆற்றீர்
ஆயினும்
அல்லவை செய்தல் ஓம்புமின்!

நல்லது செய்யாவிட்டாலும் பரவாயில்லை; கெட்டதையாவது செய்யாமல் இருங்கள். சில மனிதர்களின் குணங்களை மாற்ற முடியுமா ?......முயன்று பார்ப்போம்.

இன்றுள்ள B.Lib. Sc., M.lib. Sc., ஆகிய நூலகக் கல்வி முறைகளில் மாறுதல்களைத் தோற்றுவித்து, ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன் மேலை நாடுகளில் நிலவிய நூலகக் கல்விமுறை நோக்கி—பின்னோக்கி அழைத்துச் செல்ல முயற்சிகள் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. கடவுள்இத்தகைய இழிசெயல் நடைபெற வொட்டாமல் தடுத்து நிறுத்தி, காத்தருள்வாராக! (இறைவா! அருள் புரிவாய்!! அருள் புரிவாய்!!!)

இந்திய நூலகக் கல்வியின் தரத்தை உணர்ந்து, அக்கல்வியின் போதனை முறைகளைப் பின்பற்றத் துவங்கியுள்ள இந்த வேளையில், இத்தகைய தேவையற்ற இழி செயல்களை 'விதியின்விளையாட்டு' என்றே வர்ணிக்கத் தோன்றுகிறது.

பல்கலைக்கழகப்பணஉதவிக் கமிஷன் சார்பிலேயேஇத்தகையஇழி செயல், மாற்றங்கள் நடைபெற இருக்கின்றன என அறியும் போது......

இந்திய நூலகத் தொழில் உறுதியாக, கட்டுக்கோப்புடன் வளர்ந்து வந்திருக்கிறது. தலைமையேற்கக் கூடிய பண்பும் வளர்ந்துள்ளது. இத்தகைய நல்ல தரமான வளர்ச்சியைப் பாதுகாக்க சம்பந்தப்பட்ட அனைவரும் பாடுபடவேண்டும்.

பல்கலைக் கழகப் பண உதவிக் கமிஷன் தலைவர் திரு டாக்டர் டி. எஸ். கோதாரி அவர்களும், அக்கமிஷனின் நூலகக் கமிட்டித் தலைவர் பேராசிரியர் ஏ. ஆர். வாடியா அவர்களும் இவ்விஷயத்தில் போதிய அக்கரையும், கவனமும் செலுத்தி, தக்கநடவடிக்கை எடுத்து, இப்போதுள்ள வளர்ச்சி மேலும் மேலும் சிறப்பாக வளர வழிவகைகளை வகுத்துத்தர வேண்டும். தடை முயற்சிகளை உடைத்தெரிய உதவ வேண்டும்.

இந்திய நூலகத் தொழிலின் ஊதிய விபரம்

இந்தியாவில் நூலகத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பெறும் ஊதியம் என்ன? உழைப்பிற்கேற்ற ஊதியம் தானா ?......

(அடுத்த இதழில் முடியும்)

அமெரிக்கக் காங்கிரஸ் நூலகம்

"கருடாழ்வார்"

அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டன் நகரிலுள்ள லைப்ரரி ஆப் காங்கிரஸ் என்னும் புகழ் பெற்ற அமெரிக்கக் காங்கிரஸ் நூலகம், அமெரிக்காவின் மிகப் பெரிய நூலகமாகும். உலகிலுள்ள மிகப் பெரிய நூல் நிலையங்களில் ஒன்றாகும். இந்த நூலகத்தைப் பற்றி எழுதிப் புரிய வைக்க முடியாது. பார்த்தால் தான் புரிந்து கொள்ளலாம்.

அமெரிக்க மத்திய சட்ட மன்றம் தன்னுடைய உறுப்பினர்களுக்காக 1800-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் தேதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய சட்டத்தின்படி இந்நூலகம் அமைக்கப் பட்டது.

தேசிய நூலகம்

அமெரிக்காவின் தேசிய நூலகமும் இதுதான்.

மக்களுக்கு நேரிடையாகவும், மறைமுகமாகவும் நூலகப் பணியாற்றி, தேசிய நூலகப் பணியை செவ்வன நிறைவேற்றுகிறது இந்நூலகம்.

தோற்றம்

கட்டிடம் கட்டுவதற்கும் நூல்கள் வாங்குவதற்கும் தேவையான நிதியை 1800 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ந் தேதிய சட்டத்தின்படி அமெரிக்க அரசினர் ஒதுக்கினர். 1814ல் இந் நூலகத்தில் 3000க்கும் அதிக மான நூல்கள் இருந்தன.

தீ

1814ம் ஆண்டு ஆகஸ்டு 24ல் பிரிட்டிஷார் வாஷிங்டனை தாக்கியபோது இந்நூலகம் அடியோடு நாசமாகிவிட்டது. எனினும் அழிந்து பட்ட நூல்கள் அனைத்தையும் குடியரசுத் தலைவர் தாமஸ் ஜெப்பர்ஸனின் நூலகத்திலிருந்து விலைக்கு வாங்கி 1815 ஜனவரி மாதத்தில் மீண்டும் நூலகம் புதுப்பிக்கப்பட்டு, துவக்கப்பட்டது.

6500 நூல்களில் காங்கிரஸ் நூலகம் விலைக்கு வாங்கியது போக மீதி நூல்களை அந்நூலகத்திற்குத் தாமஸ் ஜெப்பர்ஸன் நன்கொடையாக வழங்கினர்.



அமெரிக்கக் காங்கிரஸ் நூலகக் கட்டிடங்களின் ஆகாயத் தோற்றம். முன் புறம் தோன்றுவது யு. எஸ். காபிடல்.

இந்த நூல்களை ஆதாரமாகக் கொண்டுதான் காங்கிரஸ் நூலகத்தின் இன்றைய மாபெரும் சேகரிப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது எனலாம்.

மீண்டும் தீ

*1851*ம் ஆண்டு டிசம்பர் *21*ல் வாஷிங்டனில் ஏற்பட்ட மற்ருெரு பெருந் தீ விபத்தில் காங்கிரஸ் நூலகத்திலிருந்த நூல்களில் பாதிக்குமேல் தீக்கிரையாகிவிட்டன. எனினும் இந் நூல்கள் மீண்டும் புதிதாக வாங்கிச் சேர்க்கப்பட்டு விட்டன.

வளர்ச்சி

*1815*க்கும் *1897*க்கு மிடையே உள்ள ஆண்டுகளில் இந்நூலகம் துரிதமாக வளர்ச்சியடைந்தது. நூல்களின் எண்ணிக்கையும் பல்கிப் பெருகியது.

*1840*லிருந்து வெளிநாட்டு அரசாங்கச்சான்றுகள் சேமிப்புநிலையமாகவும், நூல் உரிமைப் பதிவு நிலையமாகவும், *1866*லிருந்து ஸ்மித்தோனியன் நிறுவனத்தின் நூலகச் சேமிப்பு நிலையமாகவும் இந்நூலகம் மாறியது.

*1867*ல் போர்ஸ் என்பவர் சேகரித்திருந்த அமெரிக்கக்கலைக் களஞ்சியத் தொகுதிகளும் *1882*ல் பெஞ்சமின் பிராங்களின் சேகரித்திருந்த நூல்களும் அமெரிக்கப் புரட்சிப் பற்றி ரோச்சம்பா சேகரித்து வைத்திருந்த நூல்களும்*(1883)* இந்நூலகத்திற்கென வாங்கப்பட்டன.

குடியரசுத் தலைவர்கள்— வாஷிங்டன் *(1834)* மாடிசன் *(1837)* ஜெப்பர்ஸன் *(1848)* மன்ரோ *(1849)* ஆகியோரும் மற்றும் அலெக்சாண்டர் ஹாமில்டன் *(1848)* பெஞ்சமின் பிராங்களின் *(1882)* முதலியோரும் சேகரித்து வைத்திருந்த நூல்களையும் கடிதங்களையும் வாங்குவதற்கு அமெரிக்க நாடாளு மன்றம் அவ்வப்போது நிதி ஒதுக்கீடு செய்தது. இவையனைத்தும் *1900*—ல் இந்நூலகத்தில் இடம் பெற்றன.

நன்கொடைகள்

பல பெரிய மனிதர்கள் இந் நூலகத்திற்கு ஏராளமான நூல்களை நன்கொடையாக வழங்கிஞர்கள்.

டோனர் வழங்கிய அமெரிக்கக் கலைக் களஞ்சியத் தொகுதிகள், குஷிங். ராக்கில், இருவரும் வழங்கிய சீன இலக்கியத் தொகுப்பு நூல்கள், இரண்டாம்



வாசகர் உள்ளே நுழைந்ததும் ரோமாபுரி அரண்மனைக்கு வந்துவிட்டோமோ என்று பிரமிக்கவைக்கும் சலவைக்கல் பதித்த மாபெரும் வரவேற்புக் கூடம்.

சுல்தான் அப்துல் அமீத் வழங்கிய துருக்கிய இலக்கிய நூல்கள் முதலியன நன்கொடைகளில் குறிப்பிடத் தக்கவை. 1897ல் 7,40,000க்கு உயர்ந்தது. இவை தவிர 18,000நாளிதழ் தொகுப்புகளும் 20,000 இசைத் தட்டுகளும் 2,50,000 ஒலிப் பதிவுகளும், 40,000 படங்களும் இருந்தன.

புதிய கட்டடம்

அரசு அலுவலகக் கட்டிடமான 'காபிடலி'ல் இந்நூலகத்தின் நூல்கள் வைக்கப்பட்டிருந்தன. 1897ல் முதல் கட்டிடம் 7,000,000 (டாலர்) செலவில் கட்டி முடிக்கப்பட்டது. பிறகு இக்கட்டிடத்திற்கு நூல்கள் மாற்றப்பட்டன.

1939ம் ஆண்டு ஏப்ரல் 5ம் தேதி ஐந்து மாடி கொண்ட இணைப்புக் கட்டடம் 9,000,000 (டாலர்) செலவில் உருவாயிற்று. இன்று இந்நூலகம் சுமார் 36 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

மொத்த இருப்பென்ன?

இங்குள்ள அலமாரிகளை ஒரே வரிசையாக அடுக்கி வைத்தால் அவற்றின் நீளம் 270 மைல் தூரத்திற்கு மேல் வரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

1968 ஜுனில்

1968ம் ஆண்டு ஜுன் 30ம் தேதி கணக்குப்படி இந்நூலகத்திலுள்ள நூல்களின் எண்ணிக்கை, மற்றவைகளின் விபரங்கள் இதோ:

நூல்கள்	44,479,000
நாளிதழ் தொகுப்பு	132,000
அமெரிக்கவரலாறு, வாழ்க்கை, கையெழுத்துப் பிரதிகள்	29,145,000
தேசப் படங்கள் முதலியவை	3,208,000
இசைத் தட்டுகள், ஒலிப் பதிவுகள்	3,296,000
புகைப்படங்கள், ஸ்லைடுகள் முதலியவை	8,066,000
போனோ கிராபிக்டிஸ்க்ஸ், டேப்ஸ் முதலியன	245,000
டிராயிங்ஸ்	176,000
திரைப்படச் சுருள்கள்	92,000
மைக்ரோ பிலிம் சுருள்கள்	480,000
இதில் 184,000 செய்தித் தாள்கள்	
ப்ரெயில் நூல்கள்	1,114,000
பேசும் புத்தகங்கள்	1,622,000
மாகனடிக் நூல்கள் டேப்புகள்	12,000

மற்றும் பல உண்டு. அவை 59 மிலியன் ஆகிறது (அதாவது 5 கோடியே, 90 லட்சமாகிறது)

ஆசானும், சீடனும்

கல்வி அளிக்கும் ஆசிரியர்கள் குழந்தைகளாகவும், கல்விபெறும் குழந்தைகள் பெரியவர்களாகவும் ஆக வேண்டும்.

— காந்தியடிகள்

தலைமை நூலகர்

அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் ஆட்சிக் குழுவின் கருத்துடன் காங்கிரஸ் நூலகத் தலைவரை நியமிக்கின்றார். இந்நூலகத்தில் பணி புரிவோர் 4,200 பேர் ஆவார்கள்.

வரவு செலவு

1968ல் 51,748,774 டாலர் வரவு வந்தது.



வட்ட வடிவமான முக்கிய வாசக சாலை-மாடியிலிருந்து கிடைக்கும் தோற்றம்.

இது காங்கிரஸிலிருந்து 36, 098,612 டாலரும், மற்ற அரசு நிறுவன வாயிலாக 12,834,532 டாலரும், நன்கொடை மற்றும் இதர வகையிலிருந்து 2,815,630 டாலரும் வரவாக வந்தன.

காபிரைட் சேவைக்காக வரும் வரவு, 1968ல் 1,871, 794 டாலரும், அச்சிட்ட கேட்டலாக் கார்டுகள் மற்ற நூல்கள் வெளியீடுகளின் விற்பனையிலிருந்து 7,026,601 டாலரும் கிடைத்தது.

காங்கிரஸ் காலண்டர்

வாசகர்கள், இந்நூலக வேலை நேரம், சுற்றிப் பார்க்கும் காலம், பொருட் காட்சி விவரங்கள் மற்றவை பற்றிய முழு விபரங்களையும் அறிந்துகொள்ள 'காலண்டர் ஆப் ஈவெண்ட்ஸ்' ஐ பார்த்துத்தெரிந்து கொள்வதுஅவசியம்.

படிப்பகங்கள்

16 படிப்பகங்கள் இங்கே உண்டு. ஆராய்ச்சியாளர்கள் இதை முழுமையாகப் பயன்படுத்தலாம்.

பொருட்காட்சி, மண்டபங்கள், தேசத்தின் சரித்திரப் புகழ் வாய்ந்த பொருள்களை உல்லாசப் பிரயாணிகள் பார்வையிட்டு பல விஷயங்களை அறியலாம்.

குருடருக்கு உதவி

அமெரிக்காவில் குருடர்களுக்கான நூலகங்கள் பல உண்டு. அவற்றுள் காங்கிரஸ் நூலகமும் ஒன்று. காங்கிரஸ் நூலகம் நாடு முழுவதும் பயன்படுமாறு நடத்தப்பட்டுவருகின்றது. பேசும்நூல் என்பது குருடர் பயன்படுத்தும் நூலாகும். அமெரிக்காவிலும் குடியேற்ற நாடுகளிலும் உள்ள

குருடர்களுக்கு இச்சேவை நன்கு பயன்படுகிறது.

அரசு உதவி

இத்தகைய சேவைக்கு தபால் இலாகாவினர் கட்டணமின்றி சேவை புரிவதாக சினிமா ஒன்றில் விளக்கமாகக் கூறி விவரித்திருந்தார்கள்.

பொது மக்கள் பணி

இது காங்கிரஸ் நூலகமாக இருந்தபோதிலும் பொது மக்களுக்கான ஆய்வு நூலகமாகவும் இயங்கி வருகிறது. அனுமதி இலவசம்தான். உயர் நிலைப் பள்ளிப் படிப்பு வயதை எட்டிய எவரும் இந்நூலகத்திற்குள் தாராளமாகச் சென்று படிக்கலாம்.

நூல் கடனுதவி

காங்கிரஸ் நூலகத்திலுள்ள நூல்களை மற்ற நூலகங்கள் கடனாகப் பெற்றுத் தங்கள் வாசகர்களுக்கு அளிக்கலாம். இதே போன்று, மற்ற நூலகங்களிலிருந்தும் நூல்களை இந்நூலகம் கடனாக வாங்கித் தனது வாசகர்களுக்கு வழங்கலாம். வழங்கி வருகிறது. இதற்கென்றே 'நூல்

வாசகசாலையின் மற்றுமொரு காட்சி

கடன் பிரிவு' இந் நூலகத்தில் மிக்க சுறுசுறுப்போடு இயங்கி வருகிறது.



கி. பி. 1700ல் பயன்படுத்தப் பட்ட விலை மதிப்பு மிக்க இசைக் கருவிகளின் தோற்றம்.

வாசகர்

ஆண்டில் 15 லட்சம் ஆண் பெண் சிறுவர் ஆகியோர் இந் நூலகத்தைக் கண்டு களிக்கின்றனர். பயன்படுத்தி மகிழ்கின்றனர்.

இந்நூலகக் கட்டிடம் இதாலிய மறுமலர்ச்சிப் பாணியில் உருவாக்கப் பட்டது. கலையழகும் பயனும் மிக்க கட்டிடம் இது. இப்படிப் பட்ட நூலகக்கட்டடத்தினை கண்டு ரசித்தோர் வியந்தோர் எண்ணிக்கை ஏராளம்!

உல்லாசப் பிரயாணிகளின் கவனத்தைக் கவர இங்கே பல விஷயங்கள் உண்டு. கட்டன்பர்க் பைபிள் பொருட்காட்கி, அதில் மிகப் பழைய கருவிகள், இசைக் கருவிகள், மற்றும் பல அம்சங்கள் உண்டு.

பிரமிக்கவைக்கும் புள்ளி விவரங்களில் சில

3740 முழுநேர ஊழியர்கள், 183 மொழிகளில் நூல்கள், 270 மைலுக்கதிகமான அலமாரிகள், அடுக்குகள், மாதம் ஒரு முறை வெளியாகும் நூற்பட்டி.

3,275,207 இசைச் சம்பந்தமானவை. ரஷ்ய நூல் பதிவுகளின் பொருள் அட்டவணை; இன்னும் பல. அத்தனையும் சிறப்பானவை.

வாரச் செய்தி ஏடு

இந்நூலகம் வாரம் ஒரு செய்தி புல்லடின்-ஐ வெளியிடுகிறது.

கண்காட்சி முதலியன

அமெரிக்கப் பண்பாட்டு வாழ்க்கை மலர்வதற்கும் இந்த நூலகம் பெரிதும் பாடுபடுகிறது. இதன் பொருட்டு 1961ல் தாகூர் கண்காட்சி ஒன்றை நடத்தியது போலப் பல கண்காட்சிகளை நடத்துகிறது. சிறந்த இசைவாணர்களின் இசை விருந்துக்கு நூலகத்தில் ஏற்பாடு செய்கிறது. உலகப் புகழ்பெற்ற கவிஞர்கள், நடிகர்கள், நாடக ஆசிரியர்கள் இவர்களைக் கொண்டு நாடகங்களையும், கவிதைகளையும், பாடல்களையும் கொண்ட சுவையான நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டுகிறது. இலக்கியம், இன்கலைகள் பற்றி நிபுணர்களின் விரிவுரைகள் நடத்த ஏற்பாடு செய்கிறது.

இப்படிப் பலவசதிகள்இருந்தும் நூலகத்திற்கு இதயமும் உண்டு. புள்ளி விபரங்கள் மட்டும் இந் நூலகத்தைப் பற்றிய முழுவிபரங்களையும், வரலாற்றையும் கூறி விட முடியுமா?

சான்ருக, ஒருசமயம் டார்க்டர ராய்பாஸ்லர், இந்நூலகத்திற்குச் சென்ருர். அப்ரஹாம் லிங்கன் பற்றி ஆராய்ச்சி நடத்த, தனக்கு பல நூல்கள் வேண்டுமெனக் கேட்டார். அவர்கேட்ட நூல்கள் அப்போது வெள்ளை மாளிகைக்கு சென்றிருந்தன. பல நாட்களாகி யும் திரும்பி வரவேயில்லை. கேட் டதும் கிடைக்காத காரணத்தால் ராய் வருத்தப்பட்டார். நூலகத் தார் அந்நூல்களைத் திரும்ப வர வழைத்து, ராய்க்குத் தந்தனர். பிற்காலத்தில் அப்ரஹாம்லிங்கன் பற்றி ஆராய்ச்சி செய்தவர்களில் ராய் முதன்மை ஸ்தானத்தை வகிப்பவராக விளங்கினுர். பிறகு இந்நூலகத்தின் தகவல் பணிப் பிரிவின் தலைமைப் பொறுப்பை யும் ஏற்றுத் திறம்படப் பணி யாற்றினுர். மக்களின் அறிவுச் சுடரைத் தூண்டிவிட, காங்கிரஸ் நூலகம் ஆற்றிவரும் பணி மகத் தானதாக அமைந்துள்ளது.

மகாத்மாவுக்கு அஞ்சலி

அமெரிக்கா நெடுகிலும் காந்தி நூற்ருண்டுவிழாக்கொண்டாடப்



கி. பி. 1450–56ல் அசையும் உலோக எழுத்துக்களினுல் அச் சாகி வெளிவந்த மாபெரும் முதல் நூல் ''கட்டன் பெர்க் பைபிள்''.

ஆதாரக் கல்வி

ஆதாரக்கல்விகடல்போன்றது. அதில் எல்லா வகைக் கருத்து நதி களும் வந்து கலக்கின்றன. அதில் ஆண் பெண்ணென்ற வேற்றுமை மறைந்து போகிறது. நகரம், கிராமமென்ற வித்தியாசங்களுக் கும் அதில் இடமில்லை.

—காந்தியடிகள்

படும்சமயத்தில், அமெரிக்க சட்ட மன்றத்து (லைப்ரரிஆப் காங்கிரஸ் —அமெரிக்க காங்கிரஸ் நூலகம்) நூலகமும் மகாத்மாவுக்கு அஞ் சலி செலுத்தியது. மகாத்மா காந்தி எழுதிய நூல்களும் அவரைப்பற்றியநூல்களும் அடங் கிய புத்தகக் கண்காட்சி ஒன்றை இந்த நூலகம் மே மாதம் தொடங்கி நடத்தியது. கண் காட்சி இரண்டு மாதம் சிறப்பாக நடந்தது.

''நூலகத்தில் இருக்கும் எண் ணிறந்த புத்தகங்களிலிருந்து இந் நூல்கள்தேர்ந்தெடுக்கப்பட்டன. மகாத்மாவின் வாழ்க்கையையும், கருத்துக்களையும் விளக்கும் நூல் கள் இவை'' என்று கூறினுர் ஸெஸில்ஹாப்ஸ். இந்நூலகத் தில் தெற்கு ஆசியப் பிரிவின் தலைவராவார் இவர்.

காந்தி நூற்ருண்டு விழாக் கண்காட்சியாகிய இதில் 26 சிறப்பான நூல்கள் வைக்கப் பட்டிருந்தன. அவைஒவ்வொன் றும் முக்கியமான பக்கங்களில் திறந்து வைக்கப் பட்டிருந்தன. கண்ணுடிப் பெட்டகங்களில் உள்ள இவற்றை நாள்தோறும் அமெரிக்கக் காங்கிரஸ் நூலகத் துக்கு வரும் நூற்றுக்கணக்கான அறிஞரும், மாணவரும், அதிகாரி களும்பிறரும் கண்டு களித்தனர்.

தி. ஜ. ரங்கநாதன்

குண்டூசி கோபால்

நான் தலைவாசலைக் கடந்து முன் அறைக்குள் நுழைந்தேன். ஒரே புத்தக மயம்; அலமாரி, பெஞ்ச், ஸ்டூல், மேஜை, ஜன்னல் எங்கு திரும்பினும் அடுக்கடுக்காக நூல்கள்! பழைய புத்தகக்கடைக்குள் நுழைந்து விட்டோமோ என்றசந்தேகம் எனக்கு! "வாங்க கோபால்" என்ற மெதுவான குரல் எங்கிருந்தோ கேட்டது. பார்வையைச் செலுத்தி துழாவினேன். புத்தக அடுக்குகளுக்கு மறைவில், சிறு மேஜைக்கருகில் தி. ஜ. ர., கையில் ஒரு புத்தகத்துடன் காணப்பட்டார்!

"இவ்வளவு நூல்களைச் சேமித்துவைத்திருக்கிறீரே; ஏதாவது ஒன்று தேவைப்பட்டால் அதைத் தேடவேண்டி யிருக்கும் போலிருக்கிறதே?" என்றுகேட்க நினைத்தேன்; ஆனால், கேட்கவில்லை. பிறகு, பேட்டி முடிவதற்குள் இக்கேள்விக்கு நானாகவே பதில் தெரிந்துகொண்டேன். சில கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது அவர் தட்டுத் தடங்கல் இன்றிச் சில நூல்களை எடுத்துப் பிரித்து மேற்கோள் காட்டினர்.

"நீங்கள் எழுத முற்பட்டதற்கு முதற் காரணமாக இருந்தது எது?" என்ற கேள்வியுடன் பேட்டியைத் தொடங்கினேன்.

"நான் எழுத முற்பட்டது ஏன், எப்படி என்றெல்லாம் கூற

வேண்டுமானல், என் இளம் வயது வாழ்க்கை முழுதையுமே விளக்க வேண்டியிருக்கும்.''

''நல்லது, சொல்லுங்களேன். ரஸமாகத்தான் இருக்கும்...''

''உங்களுக்கு இப்பொழுது ரஸமாக இருக்கலாம். ஆனல், அந்த நாட்களில், என் வாழ்க்கை பெருங்காற்றில் அலைக்கழிக்கப் படும் தோணி போல ஸ்திரமற்றதாக இருந்தது''

''ஆட்சேபமில்லை என்ருல் விவரமாகக் கூறுங்கள்.''

''சரி, சொல்லுகிறேன்''என்று அவர் கூறினர்.

தஞ்சை மாவட்டத்தில், திருப்பயணம், திருவையாறு இவற்றுக்கு அருகிலுள்ள திங்களூர் என்ற சிறு கிராமமே தி. ஜ. ர. வின் சொந்த ஊர். ஆனல், பெயரில் ''தி'' என்ற எழுத்துச் சேர்ந்துள்ளது தவிர, அவ்வூருடன் அவருக்கு வேறு சொந்தம் கிடையாது!

தி. ஜ, ர. 1901-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பிறந்தவர். பதினைந்து வயது வரையில் அவர், கோவிலூரில் கர்ணமாக இருந்த தந்தையுடன் இருந்தார். தந்தை சில வருஷகாலம், பிறருடைய எழுத்துக்களை அச்சுக் கோக்கும் கம்பாஸிட்டராகவும், ஸ்ரீரங்கம் வாணீவிலாஸ அச்சகத்தில் இருந்தார். தி. ஜ. ர. வோ தம் எழுத்துக்களைப் பிறர் சதாகாலம் அச்சுக் கோக்கும் நிலைமையை அடைந்துள்ளார்!

நான்காம் வகுப்பு வரையில் ஒரத்தநாடு சத்திரம் பள்ளியில் படித்துவிட்டுப் பிறகு ஒக்கூரில் உள்ள ஒரு மிஷனரிப் பள்ளியில் படித்தார். பிறகு, நேராக எட்டாம் வகுப்பில் சேர்ந்துவிடும் நோக்கத்துடன், அந்த மிஷனரிப் பள்ளி ஆசிரியரிடம் தனியாக ஓராண்டு காலம் ஆங்கிலம் கற்ருர். அத்துடன் அவர் படிப்பு முடிவுற்றது.

தி. ஜ. ர.வுக்கு 14-ஆம் வயதிலேயே திருமணம் முடித்து விட்டார்கள். பிறகு எவ்வளவு காலம் சம்பாத்தியம் இன்றி இருக்க முடியும்? கிராமக் கர்ணம் வேலைக்கான இரண்டு தேர்வுகளிலும் வெற்றி பெற்று, 6 வார ஸர்வே பயிற்சிக்குப்பின் 1921க் குப்பின் திருக்காராயலில் பெயரளவில் கர்ணம் வேலையில் அமர்ந்தார். மணியக் காரருக்கு இவர் திறமையில் அதிக நம்பிக்கை, அதனல் கிராம வழக்குகளை இவரிடம் கொடுத்து தமக்குப் பதில் இவர் விசாரிக்கும்படி செய்வாராம்.

தி. ஜ. ர. தம்தொழிலில் மட்டுமின்றி உண்மையான சொந்த விருப்பத்திலும் கணக்குப் பிள்ளைதான். ஆல்ஜீப்ரா, ஜியாமெட்ரி ஆகிய கணக்குகளில் அவருக்கு அளவிறந்த ஆசை. இக்கணக்குகளை மேலும் மேலும் கற்க விரும்பிய அவசியத்தின் காரணமாக, அவர் தமது ஆங்கில ஞானத்தை—சுயமாகவே — அபிவிருத்தி செய்து கொண்டார். அக்கறையுடன் கற்ருல் அடைய முடியாத கல்வி எது? ஆங்கில ஞானம் அவரைச் சும்மாவிடவில்லை. ஃபார்னெலின் 'ஹெர்மிட்'டை உரைநடையில் தமிழாக்கம் செய்தார்.

1920-ஆம் ஆண்டு சமயத்தில் அவர் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதத் தொடங்கினர். அவரது ஊக்கத்துக்கு வித்திட்ட ''ஆனந்தபோதினி''யில் அவருடைய இரண்டொரு கட்டுரைகள் வெளிவந்தன. 'ஹெர்மிட்' அப் பத்திரிகையில்தான் வெளியிடப்பட்டது.

அந்தச் சமயத்தில், அவரது வாழ்க்கைப் போராட்டம் மிகக் கடுமையாகியது. கர்ணம் உத்தியோகத்தை விட வேண்டியதாயிற்று. அதனல் அவர் கும்பகோணத்துக்குச் சென்று வேறு வேலே தேட முயன்றார். மளிகைக் கடைக் கணக்கராகவும், திண்ணைப் பள்ளிக்கூட உபாத்தியாயராகவும் இரண்டுமாத காலத்தை ஓட்டினர். பின்பு தஞ்சைக்குச் சென்று, சொந்தக்கார வக்கீல் ஒருவரிடம் குமாஸ்தாவாக அமர்ந்தார். அச்சமயத்தில் ஆங்கில இலக்கியங்களை நிரம்பப் படிப்பதற்கும், அவ்வூரில் வெளிவந்து கொண்டிருந்த 'சமரஸ போதினி' என்ற பத்திரிகையுடன் தொடர்பு கொள்ளுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. சில மாதங்களில் அவர் அதில் உதவி ஆசிரியராகச் சேர்ந்துவிட்டார். பிறகு ஆசிரியரின் முழுப் பொறுப்பையும் தாற்காலிகமாக ஏற்றுச் சில காலம் நடத்தினர். அது முதல், தமக்கேற்றது எழுத்துத் தொழில் தான் என்பதைத் தி. ஜ. ர. நிர்ணயித்துக்கொண்டுவிட்டார். பிறகு, சிறிது காலம் காரைக்குடி 'ஊழியன்' பத்திரிகையில் வ. ரா. வின் அழைப்பின் பேரில் உதவி ஆசிரியராக இருந்துவிட்டு 1932ல் சென்னைக்கு வந்தார். சென்னையில் அவர் தொடர்ந்து பணியாற்றிய பத்திரிகைகள்: சுதந்திரச் சங்கு, தமிழ்நாடு, ஜெயபாரதி, ஹனுமான், சக்தி, பாப்பா, ஹிந்துஸ்தான், ஆகியவை. 1947ல் — 'மஞ்சரி' தோன்றியது முதல் — அதன் ஆசிரியராக இருந்து வருகிறார். இடையில் 3 மாதகாலம் 'நவமணி'யின் (முதல் பிரதம) ஆசிரியராகவும் இருந்தார்.

''நீங்கள் தினசரி முதல்பாப்பா பத்திரிகை வரை எல்லாவற்றிலுமே அனுபவம் பெற்றிருக்கிறீர்கள். எனினும், உங்களுக்கு மிக விருப்பமுள்ளது எத்தகைய பத்திரிகை?'' என்று கேட்டேன்.

''எனக்கு மிகப் பிடித்தது—என் லட்சியங்களுக்கு ஏற்றது—'டைஜெஸ்ட்' — அதாவது தொகுப்புப் பத்திரிகைதான்'' என்றார் தி. ஜ. ர.

''இந்த லட்சியம் உங்களுக்கு எப்பொழுது, எப்படி ஏற்பட்டது?''

''ரீடர்ஸ் டைஜெஸ்ட் பத்திரிகையை நான் முதலில் படித்ததும், 'நாமும் இது மாதிரி ஒரு பத்திரிகையை தமிழில் வெளியிட வேண்டும்' என்ற எண்ணம் தோன்றியது. இது ஹநுமான் காலத்திலேயே உண்டான ஆசை.''

''இதற்குப் பிரத்தியேக காரணம் உண்டோ?''

''ஆம். மற்றப் பத்திரிகைகளுக்கு இல்லாத ஒரு சௌகரியம் 'டைஜெஸ்ட்' பத்திரிகைகளுக்கு உண்டு. மற்றெல்லாப் பத்திரிகையிலும் சிலவழக்கமான பகுதிகளும், அம்சங்களும் இருக்கும். வாசகர்களும் வழக்கமான இந்தப் பகுதிகளை எதிர்பார்த்தே வாங்குகிறார்கள். ஆசிரியர் இப்பகுதிகளைக் கூடியவரையில் சிறந்த முறையில் நிரப்பி வரு

கல்வி

ஒருவரிடமுள்ள சிறந்த திறமையை வெளிப்படுத்துவதே உண்மையான கல்வி. மனித வர்க்கமாகிய புத்தகத்தைவிடச் சிறந்த புத்தகம் வேறு என்ன இருக்கமுடியும்?

— காந்தியடிகள்

வார். பிரபல எழுத்தாளர்கள் அல்லது கதாசிரியர்களிடமிருந்து ஆசிரியர் கேட்டு வாங்கும் விஷயம் சுவாரஸ்யக் குறைவாக இருந்தாலும், அவற்றை நிராகரிக்கவோ, அல்லது கூட்டிக் குறைத்து வெளியிடவோ முடியாத தாட்சிண்யமும் நிர்ப்பந்தமும் ஏற்படுகின்றன. ஆனல், 'டைஜெஸ்ட்'களுக்கு இத் தொல்லை கிடையாது. மற்றப் பத்திரிகைகளில் வெளியாகும் சிறந்த விஷயங்களை மட்டும் தேர்ந்தெடுத்து; அவற்றில் ருசியற்ற பகுதிகளை நீக்கி விட்டு வெளியிடலாம். இந்த அபூர்வ யுக்தியுடன் 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்' தோன்றி வளர்ந்த கதை, சுவாரஸ்யமானது.''

''அதைக் கூறுங்களேன்.''

''பத்திரிகைகள் படிப்பதில் மிக விருப்பம் கொண்ட சுமார் 50 பேர்கள் தமக்குள் ஒரு குழுவை அமைத்துக் கொண்டனர். ஒருவர் எல்லாப் பத்திரிகைகளையும், அவற்றில் வெளிவரும் எல்லா நல்ல கட்டுரை கதைகளையும், தேடிப் படிப்பது என்பது சாத்தியம் இல்லை அல்லவா? அதனல் குழுவின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் சிற்சில பத்திரிகைகளை படிப்பதென்றும், அவரவர் தாம் படிக்கும் பத்திரிகைகளில் வெளிவரும் நல்ல கட்டுரை கதைகளைப் பொறுக்கிக் கொடுப்பது என்றும் ஏற்பாடு செய்து கொண்டனர். பிறகு, இப்படியாகத் தேர்ந்தெடுக்கும் விஷயங்களை 'டைப்' செய்து பிரதிகளைத் தங்களிடையே வழங்கிக்கொண்டனர். பின்னர், இக்குழுவின் அங்கத்தினர்கள் அதிகரிக்கவே பிரதிகளை டைப் செய்வதற்குப் பதில், தொகுப்புப் பத்திரிகையாக அச்சிட்டு, அங்கத்தினர்களுக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் வழங்கலாயினர்.

''ஆகா, இது நல்ல ஏற்பாடு தான்.''

''நல்ல ஏற்பாடுதான். இருந்தாலும், இதற்கும் சில சங்கடங்களும், இடையூறுகளும் ஏற்படத் தான் செய்தன. ஆரம்பத்தில், தங்கள் கட்டுரைகளை 'டைஜெஸ்ட்'டில் வெளியிடுவதற்கு மற்றப் பிரபல பத்திரிகைக்காரர்கள் பெருமையுடன் இலவசமாகவே அனுமதிவழங்கினர். நாளாவட்டத்தில், டைஜெஸ்டின் விநியோகம் அதிகரிக்கவே, அது தான் எடுத்து வெளியிடும் விஷயங்களுக்கு நிறையப் பணம் கொடுத்து அனுமதி பெற வேண்டியதாயிற்று.''

''ஒரு வேளை, இப்படிப் பணம் கொடுத்து அனுமதி பெறுவது கட்டுபடியாகாத நிலைமையும் ஏற்பட்டிருக்குமோ?

''ஆம், அதன் விளைவாக, இப் பத்திரிகையாளர்கள், திறமை மிக்க பல எழுத்தாளர்களை சம்பளத்திற்கு அமர்த்திக்கொண்டு, அவர்கள் தயாரிக்கும் ருசிமிக்க கட்டுரைகளை, பிரபலம் இல்லாத சில பத்திரிகைகளில் முதலில் வெளியிடச் செய்து, பிறகு தம் டைஜெஸ்ட்டில் வெளியிடத் தொடங்கினர். பின்னர், 'வேறு பத்திரிகைகளில் வெளிவராத சில கட்டுரைகளைத் தம் பத்திரிகையிலேயே முதன் முதலாக வெளியிடுவதில் தவறில்லை' என்ற கொள்கையை பின்பற்றலானுர்கள்.''

''ஒரு டைஜெஸ்ட் பத்திரிகை அசல் கட்டுரைகளையும் பிரசுரிப்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?''

''திறமைசாலிகளை வேலைக்கு அமர்த்திக் கொண்டு, பலவகையான சிறந்த விஷயங்களை எழுதச் செய்து, அவற்றை வெளியிடுவது தவறல்ல. ஆனல் டைஜெஸ்

டின் அடிப்படை நோக்கம் மாறு மலிருக்கவேண்டும்.''

''டைஜெஸ்டின் அடிப்படை நோக்கம் என்ன?''

''கட்டுரைகள் பலதரப்பட்ட வையாக இருக்கவேண்டும் என்ப தோடு, 'சாதாரண வாசகருக்கு இது புரியுமா, பிடிக்குமா?'' என்ற கேள்வியுடன் ஒவ்வொன் றும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.''

''உங்கள் அனுபவத்தில், தமி ழில் டைஜெஸ்ட் வெற்றி அளித்திருக்கிறதா?''

''மஞ்சரியை சாதாரண வாச கன் முதல் பெரிய படிப்பாளி கள் வரை எல்லோரும் படிக் கிருர்கள். ஒரு முன்னுள் நீதி பதியை நான் சந்தித்தபோது, 'உங்கள் மஞ்சரியை ஆரம்பம் முதல் பைண்ட் செய்து வைத் திருக்கிறேன்' என்று பெருமை யாகச் சொன்னுர். இதிலிருந்து, என் லட்சியம் ஓரளவு வெற்றி பெற்றுள்ளது என்று அறியலாம். ஆனல், எனக்கு இன்னும்திருப்தி யில்லை. இப்பத்திரிகையை மிகப் பிரபலமாக்குவதற்கு முயன்று கொண்டிருக்கிறோம்.''

''முன்னேவிடத் தமிழ் படிப்ப வர்களின் எண்ணிக்கை கூடியிருக் கிறது. ஆனல் படிப்பவர்களின் தரம் உயர்ந்திருக்கிறதா?''

''உயர்ந்திருப்பதாகத்தோன்ற வில்லை. உலகில் எந்த நாட்டி லுமே உயர் ரகம், சாதாரணம் என்ற இரு பிரிவுகள் இருக்கவே செய்கிறது. உயர்ரகப் பத்திரிகை களுக்கும் நூல்களுக்கும் விற்பனே, சாதாரண ரகப் பத்திரிகைகள், நூல்களேவிட மிகக் குறைவாகத் தான் இருந்து வருகிறது. ஒவ் வொரு மனிதனிடமும் உயர்ந்த

கல்வி

மேல்படிப்பை ஆங்கிலத்தின் மூலம் போதிப்பதென்று இந்தி யாவில் கொண்டு வரப்பட்டிருக் கும் முறை, நாட்டு மக்களின் அறிவுக்கும் ஒழுக்கத்திற்கும் சொல்ல முடியாத தீமையைச் செய்திருக்கிறது.

— காந்தியடிகள்

பண்பாடு, மிருக குணம் என்று இரண்டுமே இருக்கின்றன. படிப் பும், அறிவும், பண்பும் நிறைந்த வர்களிடம் கூட, இந்த மிருக குணங்கள் இருக்கும். ஆனல், அவை வெளியில் தெரியாமல் அமுங்கியிருக்கும். உதாரணமாக ஒரு பிரபல வக்கீல் ஓர் ஆபாசத் தமிழ்ப் பத்திரிகையை ரகசிய மாக வாங்கிப் படிப்பது வழக்கம் ஒரு நாள், அவர் இப் பத்திரி கையை வாங்கிக்கொண்டு வீட டைந்தார். அதை நள்ளிரவில் ரகசியமாகப் படித்துக்கொள்ள லாம் என்று, தன் மனேவியின் கைக்கு எட்டாதபடி ஒளித்து வைத்து விட்டு, சமையலறைப் பக்கம் சென்ருர். அங்கே அவர் மனேவி, அவர் வாங்கிவந்த அதே பத்திரிகையின் வேறு பிரதி யொன்றை, ஒரு மூலேயில் அமர்ந்து ரகசியமாகப் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டா ராம்!''

''மனிதனின் உயர் பண்புகள் மேலோங்கவும், மிருக உணர்ச்சி கள் அமுங்கி விடவும் என்ன செய்யலாம்?''

''பத்திரிகையாளர்களும், நூலாசிரியர்களும் 'மிருக உணர்ச்சிகளுக்கு தூபம் போடு வது தவறு' என்ற கொள்கை யைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மக்களின் மனத்தில் உயர் பண்புகள் மேலோங்குவதற்கு, அபாரமான சக்தியுடைய தலைவர்களும் தார்மிக இயக்கங்களும் தோன்ற வேண்டும்.''

''நீங்கள் கட்டுரைகள், கதைகள், நாவல்கள் எல்லாம் எழுதியிருக்கிறீர்கள் அல்லவா?''

''நாவல் எழுத நான் முயலவில்லை. கட்டுரைகள் 5 தொகுப்புகளும், கதைகள் 5 தொகுப்புகளும் வெளிவந்துள்ளன? இவை தவிர, ஆங்கிலத்திலிருந்து பல நூல்களை மொழி பெயர்த்திருக்கிறேன். அவற்றுள் முக்கியமானவை: ஹரீந்தரநாத் சட்டோபாத்யாயாவின் 5 நாடகங்கள், நேருவின் அரசியல் நிர்ணய சபை. லூயிஃபிஷரின் மகாத்மா காந்தி சரிதை, ஹெலன் கெல்லர், ஜிம் கார்பெட்டின் இரு நூல்கள். மற்றும் குழந்தைகளுக்காக 'பாப்புவுக்கு பாரதி, காந்தி' போன்ற நூல்களையும் எழுதியிருக்கிறேன்.''

''இவற்றிற்காக நீங்கள் கௌரவிக்கப் பட்டிருக்கிறீர்கள் அல்லவா?''

''ஆம். 'நொண்டிக்கிளி' என்ற சிறு கதைத் தொகுப்பிற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் பரிசளித்தது. 'வண்ணாத்திப் பூச்சி' 'பாப்பாவுக்கு காந்தி' ஆகிய இரு நூல்களுக்குத் தனித்தனியே சென்னை அரசாங்கம் இரு பரிசுகள் அளித்துள்ளது. குழந்தை எழுத்தாளர் சங்கம், தமிழ் எழுத்தாளர் சங்கம், பாரதி சங்கம் ஆகியவை கேடயங்கள் வழங்கியுள்ளன.''

''நீங்களே உங்கள் நூல்களை வெளியிட்டிருக்கிறீர்களா?''

''சந்தனக் காவடி என்ற ஒரு நூலை மட்டும், ஓர் அவசியத்தின் பேரில், நானே வெளியிட்டேன். அதுவே என் முதல் புத்தகமுங்கூட.

''எழுத்தாளர்கள் என்ன லட்சியத்தை மேற்கொள்ளலாம்?''

''ஒவ்வொருவரும் வாழ்க்கையை வெவ்வேறு கோணத்திலிருந்து நோக்குகின்றனர். ஆசிரியர் தம் நோக்கையும், அனுபவத்தையும் தம் எழுத்து மூலம் வாசகர்களுக்கு மாற்றும் வகையில் எழுத வேண்டும்.''

''கதா பாத்திரங்களும், சம்பவங்களும் சிறப்புறுவதற்கு அசல் வாழ்க்கை பிரதிபலிக்கப்பட வேண்டுமா?''

''இது அத்தியாவசிய மல்ல. கதாசிரியர் தம் லட்சியபாத்திரங்களையும், கற்பனைச் சம்பவங்களையும், நிஜமாக நடந்தவைபோல் சிருட்டிப்பது இதைவிட மேலானது. உதாரணமாக, 'லா மிசரபிளே' நூலில் வரும் கற்பனைப் பாதிரியைப் பற்றி ஆசிரியர் விக்டர் ஹியூகோ 60 பக்கங்கள் எழுதி, அவரை மறக்கமுடியாத உன்னத உண்மைப் பாதிரியாகவே தோன்றச் செய்திருக்கிறார் அல்லவா? கற்பனையாகச் சிருஷ்டிக்கப்படும் லட்சிய பாத்திரங்கள் உண்மையான மனிதர்களையும் தோற்றுவித்து விடக்கூடும். ஹரிச்சந்திரன் கதை மனத்தில் ஆழப் பதிந்ததன் விளைவாகத்தானே, 'உண்மையே கடவுள்' என்ற லட்சியத்துடன் காந்திஜி தோன்றினார். சாத்தியமற்றதைச் சாத்தியம் உள்ளது போல் சிருட்டிப்பதில் தான் எழுத்தாளனின் சுயத் திறமை வெளிப்படும்.''

''ஏதேனும் பிரசாரத்திற்காகக் கலை, அல்லது எழுத்து, பயன்படுத்தப்படலாமா?''

"பிரசாரம் சம்பந்தமின்றித் தூய்மையான லட்சியங்களுடன் விளங்குவதே கலைக்கு அழகு. அப்படியே பிரசாரம் புகுத்தப்பட்டாலும், அது ஆராய்ந்து கண்டு பிடிக்க வேண்டிய அளவில், அமுங்கிக் கிடக்க வேண்டும்."

"தமிழில் உரைநடை வளர்ச்சி பற்றி நீங்கள் ஒரு நூல் எழுதி வருகிறீர்களாமே; அது பற்றிச் சில விவரங்கள் தரமுடியுமா?"

"தமிழ் மொழி தற்கால, எதிர்கால அவசியத்திற்கும், உபயோகத்திற்கும் தக்கபடி மாறுதல் பெற வேண்டும். புதிய மரபுகளுக்கும், வழக்கத்திற்கும் இடம் வேண்டும். 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்று 'நன்னூலி'ல் கூறப்பட்டுள்ளது. தமிழ் நடை வளர்ச்சிக்கு இலக்கணம் குறுக்கீடாக இருக்கக் கூடாது. இதற்கு மாறாக, இலக்கணத்தில் விதி விலக்குகளும் திருத்தங்களும் புகுத்தப்பட வேண்டும். இதைப் பண்டிதர்கள் ஆட்சேபிக்கிறார்கள். 'பழையன கழிதல், புதியன புகுதல்' பற்றி ஒரு தமிழ் வித்வானிடம் சுட்டிக் காட்டினேன். அதற்கு அவர், 'கழிதல், புகுதல் என்று சொல்லப் பட்டிருக்கிறதே தவிர, கழித்தல், புகுத்தல் என்று சொல்லப்படவில்லையே?' என்று கடுமையாக வாதித்தார். இது விசித்திரமான வாதம். மொழியில் மனிதனின் புகுத்தல் இன்றிப் புகுதலோ, கழித்தலின்றிக் கழிதலோ எப்படி நிகழும்? பண்டிதர்களின் கண்டனங்களுக்கு எதிராகவேதான் தமிழ் மொழி தற்போதைய நல்ல வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இனி இவ்வளர்ச்சி துரிதம் அடைவதற்குத் தக்கபடி இலக்கண அனுமதியும் ஏற்படுத்தப் படவேண்டும்."

"விஞ்ஞான, தொழில் நுட்பங்கள் பற்றித் தமிழில் நூல்கள் எழுதுவது அதிகரிக்க வேண்டும் அல்லவா?"

"விஞ்ஞான வளர்ச்சி அதிவேகமாக இருக்கிறது. நேற்று இருந்த நிலை இன்றில்லை என்றபடி, விஞ்ஞானத் தத்துவங்களிலும், கண்டுபிடிப்புகளிலும் தினம் தினம் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இந்த விஞ்ஞான யுகத்தில் நாம் பின் தங்கி விடக் கூடாது. நம் நாட்டு விஞ்ஞான அறிஞர்கள் மக்களுக்கு எட்ட இருப்பவர்கள். மக்களுக்குப் புரியக் கூடிய வகையில் அவர்களால் எழுத முடியாது. எழுத்தாளர்களோ இவ்விரு தரத்தினருக்கும் இடையே உள்ளனர். எனவே, விஞ்ஞானிகளும், எழுத்தாளர்களும் ஒத்துழைத்து, எளிய விஞ்ஞான (Popular Science) நூல்களை அதிகம் வெளியிட வேண்டும். ஆரம்பத்தில் விஞ்ஞானத்தில் உயர்தர ஆராய்ச்சி நூல்களோ, கடுமையான பாடத் திட்டங்களோ வர இயலாது. பல துறையிலும் அடிப்படையான விஞ்ஞானக் கருத்துகள் மக்களிடம் பரவும்படி ஜனரஞ்சகமான எண்ணற்ற எளிய விளக்க நூல்கள் ஆங்கிலத்தில் வருகின்றன. அந்த வகையான நூல்களைப் பின்பற்றி எழுதுவதை இந்திய எழுத்தாளர்கள் உடனே கைக்கொள்வது சாத்தியம்."

○

பெண் கல்வி

பெண்கள் தக்க முறையில் கல்வி பயில வேண்டும். ஆனால் ஆண்களைப் போல நடந்தால் மேன்மையுற முடியாது.

—காந்தியடிகள்

INSTITUTE OF LIBRARY SCIENCE

CERTIFICATE IN LIBRARY SCIENCE

Session X

The following is the provisional list of Register Numbers of tcandidates who have declared to have passed the Certificate in Library Science Examination held in August 1969 the last day of he examination being 25th August, 1969 by the Department of Public Libraries Madras Subject to confirmation by the Fort. St. George Gazettee.

2. The Certificates of those candidates who have passed the examination will be sent to the Secretaries of the Local Library Authorities concerned in due course from whom the candidates will get their certificates.

3. The unsuccessful candidates may contact the Librarian, Connemara Public Library, Madras-8 for the details regarding the next examination in due course.

Reg. No.	Name.	Reg. No.	Name.
	Second Division		Third Division
1	BAGAVATHY (D)	5	GANESAN (K)
2	BALAKRISHNAN (S)	7	KALIYAPERUMAL (M)
4	DANDAPANI (N.R.)	8	KAMUDURAI (N)
6	JAYACHANDRAN (L)	9	KHAJAMOHIDEEN (S.M.S.)
11	KUCHELAN (K.S.)	10	KRISHNASWAMI (S)
13	MANI (S)	16	NAMASIVAYAM (S)
14	MUTHUKUMARASWAMI (K M.)	21	RAMADOSS (P)
15	NACHIMUTHU (G)	24	RAMANATHAN (P)
19	PREMAVATHY (S)	25	SARASWATHI (N)
20	RAJAKUTTAN (V)	26	SATCHITANANDAM (K)
23	RAMAN (E.K.)	28	THAMBI DORAI (S)
29	THIRUVENGADAM (G.B.)	30	USHA (V.V.)
		33	RAMACHANDRAN (R)

வானதி பதிப்பகம்

வாசவன்



1946-ஆம் ஆண்டில் ஓர் இரவு. மணி பன்னிரண்டு.

உலகமே உறங்கிக் கொண்டிருந்த அந்த வேளையில், இருபது வயது வாலிபர் ஒருவர் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தார்.

'உன் எதிர்காலத்துக்காக நீ என்ன செய்யப்போகிறாய்?' என்று மாலையில் அவர் தந்தை ஒரு கேள்வியைக் கேட்டார்.

அந்தக் கேள்வி அந்த வாலிபர் மனத்தில் ஒரு குளவியைப் போல மாலையிலிருந்தே கொட்டிக் கொண்டிருந்தது. ஆமாம். எதிர்காலத்துக்காக என்னவாவது செய்தே ஆகவேண்டும். எதைச் செய்வது?

அப்பொழுது அவருக்குச் செய்யத் தெரிந்தவை எல்லாம் இவை தாம்: ஓயாமல் புத்தகங்களைப் படித்துக் கொண்டிருப்பது; ஆசிரியர்களின் நடை அழகில் சொக்கி நிற்பது; ஆர்வத்துடன் கதைகளை எழுத முயல்வது.

'இந்த இலக்கிய ஆர்வத்தையே எதிர்காலமாகக் கொண்டால் என்ன?'

அந்த வாலிபரை அவர் மனம் இப்படி ஒரு கேள்வி கேட்டது.

பொழுது விடிந்தது. அன்றைய உலகத்துக்கும், அவருக்கும்.

இலக்கிய ஆர்வத்தையே தன் எதிர்காலத்துக்கு ஆதாரமாகவும், லட்சியமாகவும் கொண்ட அந்த இளைஞர், தன் குடும்பத்தினரையும், தான் வாழ்ந்து பழக்கப்பட்ட சூழ்நிலையையும் விட்டு, தனக்கு முற்றிலும் புதியதோர் உலகத்தைச் சந்திப்பதற்காக, தேவகோட்டையிலிருந்து சென்னைக்கு ரெயில் ஏறினார்.

அன்று தனிமனிதராக, ஊக்கமும் உற்சாகமுமாக, உண்மையும் உழைப்புமாகச் சென்னைக்கு வந்து, வாழ்க்கையில் பல நெருக்கடியான கட்டங்களைச் சந்தித்து, இரண்டு முழம் மேலே ஏறினால் நாலு முழம் கீழே சறுக்கி விழுந்து, விழுந்த இடத்தில் எல்லாம் மண்ணைக் கவ்வாமல், வெற்றிக்கு மண் எடுத்து, விண்ணுக்கு உயர்ந்து நிற்கும் திரு. திருநாவுக்கரசு அவர்கள், அறிவுக்கென்று ஆற்றலோடு எடுத்த ஆலயம்—

வானதி பதிப்பகம்

955ல் பிறந்த வானதி பதிப்பகம், இந்தப் பதினான்கு ஆண்டு காலத்தில் சாதித்த சாதனைகள், மகத்தானவை; எண்ணிப் பார்க்கச் சுவையானவை.

வானதி பதிப்பகத்தில் இதுவரை ஐநூறுக்கும் அதிகமான நூல்கள் வெளி வந்திருக்கின்றன. அவற்றில் பல பதிப்புகள் வெளியான நூல்கள் இருநூறுக்கும் அதிகம்.

தங்களுக்கென்று தனி லட்சியங்களும், பிடிவாதங்களும் கொண்ட பிரபல எழுத்தாளர்களில் பெரும்பாலோர், வானதி பதிப்பகத்தில் நேசத்தோடும், பாசத்தோடும் நீங்காத நிரந்தர உறவு கொண்டிருக்கிறார்கள்.

சங்க இலக்கியங்களுக்கு 'கழகம்' என்றால், நவீன இலக்கியங்களுக்கு 'வானதி பதிப்பகம்' என்று தமிழ் கூறும் நல்லுலகம் கூறுகிறது.

வானதி பதிப்பகத்தின் இலச்சினையாக அமைந்திருக்கும் யானையைப் பார்த்தாலே, 'இது வானதி புத்தகமா? அப்படியானால் தரமுள்ள நூலாக இருக்குமே' என்று நம்பிக்கையோடு வானதியின் நூல்களை வாங்குவதற்கு ஏராளமான வாசகர் எப்பொழுதும் தயாராக இருக்கிறார்கள்.

இவை எல்லாம் 'வானதி' திருநாவுக்கரசு அவர்களின் கண்ணுக்குத் தெரிந்த சாதனைகள்.

இந்த எடுப்பான சாதனைகளைக் காண்பதற்காக அவர் மேற்கொண்ட விரதங்களையும், பத்தியங்களையுமே நான் மகத்தான சாதனைகள் என்பேன்.

எழுத்தாளர் திருநாவுக்கரசு

ஒரு டாக்டராக வேண்டுமானால், மருத்துவத் துறைக்கான கல்வியில் தேர்வு பெறவேண்டும் என்ற கட்டாயம் இருப்பதைப் போல, பதிப்பகம் நடத்துவதற்கு இலக்கிய உணர்வும், எழுத்தாற்றலும் இருக்க வேண்

டும் என்ற கட்டாயம் இந்தத் தமிழகத்தில் இல்லை. நல்ல தரமான நூல்களைத் தேர்ந்தெடுத்து மக்களுக்கு வழங்கும் மாபெரிய பணியைச் செய்யக்கூடிய அறிவுலகத் தூதுவர்கள் பதிப்பாளர்கள். சிருஷ்டிக்கப்பட்ட பாத்திரங்களின் உணர்ச்சியில் வாழும் எழுத்தாளர்களை விட, சிருஷ்டிக்கப்பட வேண்டிய வாசகர்களுக்குத் தரமான இலக்கியங்களை வழங்கும் ஆற்றல் பெற்றவர்களாக இருக்கவேண்டும் அவர்கள்.

'பின்னால் ஒரு காலத்தில் பதிப்பகம் ஒன்றைத் தொடங்க வேண்டும்' என்ற லட்சியக் கனவு கண்டு கொண்டிருந்த திருநாவுக்கரசு அவர்கள் இதை முன்னாலேயே உணர்ந்திருந்தார். வழங்கத் தயாராகிவிட்ட வானம், மேகத்தைக் கருவாகக் கொள்வதைப் போல, பின்னால் ஒரு சிறந்த பதிப்பாளராக வளர்வதற்கு, தனக்குள் ஓர் எழுத்தாளனைக் கருவாகக் கொள்ளுதல் அவசியம் என்று நினைத்தார்.

அவருக்கு இலக்கிய ஆர்வம் ஏற்கனவே இருந்ததால், எழுதுவது சுலபமாக இருந்தது. சுவையாகவும் இருந்தது.

'பலே!' என்று பாராட்டினார் அவருடைய நெருங்கிய தோழர் திரு. தமிழ்வாணன்.

அந்தக் காலம் தேசபக்தர்களுக்குச் செல்வாக்கு இருந்த காலம். அப்பொழுது மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த தேசபக்தர் திரு.ராம, சடகோபன், 'தியாகி' என்றொரு பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தார். அந்தப் பத்திரிகையில் உதவியாசிரியராகச் சேர்ந்த திருநாவுக்கரசு அவர்கள், எழுதும் திறனோடு, அச்சக அனுபவமும் பெற்றார். பிறகு தமிழ்வாணன் ஆசிரியராக இருந்து, திரு சக்தி கோவிந்தன் வெளியிட்ட 'அணில்' என்ற குழந்தைகள் பத்திரிகையில் கொஞ்ச நாள் உதவி ஆசிரியர் வேலை.

அவர் ஏழெட்டுக் குழந்தை நூல்கள் எழுதினார். ஒவ்வொன்றும் ஏழாயிரம் பிரதிகள். அத்தனையும் குழந்தைகள் மத்தியில் வைத்த லட்டு உருண்டைகள். ஒரே வாரத்தில் எல்லாப் பிரதிகளும் விற்பனையாகிவிடும்.

அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை திருநாவுக்கரசு அவர்களின் எழுத்தைக் கூர்ந்து கவனித்து வருகிறேன் நான். அவருடைய நடை எளிமையானது. அலைகளின் கூச்சலையும், புயலின் வேகத்தையும் அவருடைய நடையில் பார்க்க முடியாது. அவருடைய நடையில் அமைதி இருக்கும். ஆழம் இருக்கும். திடீரென்று கடலின் ஆழத்திலிருந்து மேலே வந்து தெறிக்கும் முத்தைப் போன்ற கருத்துகள், பளீரென்று அவர் படைப்பில் வந்து விழும்.

அப்பொழுதிருந்த எழுத்தாளர் திருநாவுக்கரசை இப்பொழுது நான் பார்க்க முடியவில்லை. இன்று அவருடையஎழுத்து 'பதிப்புரை' என்ற அளவோடு வட்டம் அடித்து நின்று விடுகிறது. அவர் இன்றுநிறைய எழுதவில்லைதான்; ஆனால் நிறைவாக எழுதுகிறார். இலக்கியத் தரமுள்ள படைப்புக்களைத் தேர்ந்தெடுக்கிறார். ஓர் 'எழுத்தாளர், பதிப்பாளராக இருந்தால் எத்தகையத் தகுதியான புத்தகங்கள் வரும்?' என்பதற்குச் சிறந்த விளக்கமாக இருக்கின்றன இவர் தேர்வின் வழியே வெளியாகும் வானதி பதிப்பக நூல்கள்.

பதிப்பாளர் திருநாவுக்கரசு

லட்சிய நோக்கில் ஒருபடி ஏறியாகிவிட்டது எழுத்தாளரான அளவில். இன்னொரு படி ஏறியாக வேண்டுமே! அதாவது பதிப்பாளராக வேண்டுமே! வழி என்ன?

வழி இருக்கிறது. பணம் வேண்டுமே!

அந்தக் காலத்தில் கொஞ்சம் இருந்தால் போதும் ஆனால் அந்தக் கொஞ்சத்துக்குக் கூடப் பஞ்சமாக இருந்தது.

'நான் இருக்கிறேன்' என்று சொல்லிக் கொண்டு வந்தார் நண்பர் தமிழ்வாணன்.

'நான்' சரிதான்; ஆனால் பணம்? அங்கேயும் மேற்படிதான்!

ஆனால் எண்ணிக்கை அளவில் இரண்டு மேற்படிகள்!

'துணிவே துணை' என்று முழங்கினார் தமிழ்வாணன்.

'உறுதியே துணை' என்று உற்சாகத்துடன் கூவினார் திருநாவுக்கரசு.

'ஜில் ஜில் பதிப்பகம்' பிறந்தது.

தமிழ்வாணன் எழுதுவார். திருநாவுக்கரசும் எழுதுவார். ஓரணா விலையுள்ள நூல்களும், எட்டணா விலையுள்ள நூல்களும் 'ஜில் ஜில்' என்று வந்தன.

நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை 'ஜில் ஜில்' பதிப்பகம்! அது தன் தோல்வியை நிழலாக விட்டுப் போய் விட்டது. ஆனால் அந்த நிழல் அவருக்குக் கிடைத்த அருமையான நிழல். விற்பனைத் துறையில் அவருக்குத் திறமையை அளித்த அந்த நிழலின் அருமையை இன்று 'வானதி பதிப்பகம்' சுகமாக அனுபவிக்கிறது.

அடுத்து அவர் கண்ட பதிப்பகம், 'வெண்ணிலா' வெளியீடு. அதன் வாயிலாக பிரபல எழுத்தாளர்களின் நூல்களை எட்டணா விலையில், மிகக் கவர்ச்சிகரமான முறையில் வெளியிட்டார். அந்தக் காலத்தில் பத்து ரூபாய் விலையுள்ள நூல்கள் கூடத் தயாரிப்பு அளவில் தரக் குறைவாக இருந்தன. புத்தகத் தயாரிப்பிலேயே ஒரு புரட்சியை ஏற்படுத்துகிற அளவில் எட்டணாப் புத்தகங்களை தரமான காகிதத்தில், வார்னிஷ் போட்ட மூவண்ண அட்டையோடு கொண்டு வந்தார். நூற்றுக் கணக்கில் கூடப் புத்தகப் பிரதிகள் விற்காத அந்தக் காலத்தில், ஆயிரக் கணக்கான பிரதிகளை விற்று அற்புதம் செய்தவர் அவர். பத்திரிகைகளுக்கு ஏஜெண்டுகள் இருப்பதைப்போல அவருடைய வெளியீடுகளுக்கும் நிரந்தரமான ஏஜெண்டுகள் இருந்தார்கள். இலங்கைக்கு மட்டும் மோகன் அண்ட் கம்பெனியின் மூலம் இரண்டாயிரம் பிரதிகள் போகும். பர்மாவுக்கும் மலேயாவுக்கும் மூவாயிரம் பிரதிகளுக்குக் குறையாமல் போகும்.

தண்ணொளி வீசிய வெண்ணிலாவை இருட்ட வைப்பதற்கென்றே இரண்டு புதிய முயற்சிகளைச் செய்யத் தொடங்கினார் திருநாவுக்கரசு. குழந்தைகளுக்கொரு பத்திரிகை: 'மிட்டாய்'. இலக்கியத்துக்காக ஒரு பத்திரிகை: 'வெண்ணிலா!' இந்த இரண்டும் திருநாவுக்கரசு அவர்களின் தோளில் இருந்து கொண்டு அவர் செவியைக் கடித்தன. பதிப்பகத்தில் வந்த பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை, அவர் நடத்திய இரண்டு பத்திரிகைகளும் உறிஞ்சித் தீர்த்தன.

பிறகு வெண்ணிலவு இல்லை. வெளிச்சம் இல்லை. இருட்டு. 'கருங்கும்'மென்ற இருட்டு.

விடிவெள்ளி வானதி

பதிப்பகத் துறையில் இரண்டு முறைகள் ஏற்பட்ட தோல்விகள் திருநாவுக்கரசு அவர்களைத் தீவிர மாகச் சிந்திக்க வைத்தன. தன்னை இடறி விட்ட இடங்கள் அவருக்குப் புரிந்தன. தன்னை மூச்சுத் திணற வைத்த மடுக்கள் அவர் கண்ணுக்குத் தெரிந்தன.

இனி பதிப்பகத் துறையில் மூன்றுவது முயற்சி. போன இடத்துக்குத் திரும்பிப்போகாமல் வளத்தை நோக்கி வளரும் முயற்சி—

வானதி பதிப்பகம் வடிவம் கொண்டது.

வானதியின் தொடக்க காலத்தில், திருநாவுக்கரசு அவர்களின் பொருளாதாரம் ஒரு புன்னகையாக மட்டுமே இருந்தது. அதோடு வாசகர்கள் புத்தகங்களை வாங்கிப்படிக்கும் ஆர்வமும் அப்பொழுது அடியோடு வற்றிப் போயிருந்தது. ஒரு பக்கம் பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ள வேண்டி இருந்ததோடு, விலைகொடுத்து வாங்கிப் படிக்கும் வாசகர்களையும் அவர் தேடிப் பிடிக்க வேண்டி இருந்தது.

மனிதனுக்கு எத்தனை வகைத் தேவைகள்? அவனுக்குச் செல்வம் வேண்டும். நல்ல நண்பர்கள் வேண்டும். இன்பம் பயக்கும் இல்வாழ்க்கை வேண்டும். சமூகத்தில் அவனுக்கு மதிப்பு வேண்டும். அவனுக்கு வசதியான தொழில் வேண்டும்.

'இத்தனையையும் வேண்டுகிற மனிதன் அவற்றைப் பெறுகிற வழி துறைகளைத் தெரிந்தவனாக இருந்தானா? இல்லை!'

இந்தச் சிந்தனையைத் தன்னுள் எழுப்பிக் கொண்ட திருநாவுக்கரசு அவர்கள், 'வாழ்வு முன்னேற்ற நூல்கள்' வரிசைப் புத்தகங்களை வெளியிட்டார். புத்தகங்களைக் கவர்ச்சியாக வெளியிடத் தெரிந்திருந்த அவர், அந்தப் புத்தகங்களைப் படிப்பதால் என்னென்ன நன்மைகளைப் பெறலாம் என்பதையும் கவர்ச்சியாகச் சொல்லத் தெரிந்து கொண்டிருந்தார். அந்த இரண்டுமாகச் சேர்ந்து அவர் வெளியிட்ட புத்தகங்களை அமோகமாக விறகச் செய்தன.

வானதி பதிப்பகத்தில் வளம் கொழிக்க ஆரம்பித்தது.

வானதியின் நூல்கள்

'வளம் இலக்கிய வளமாக வேண்டும். உலகாளும் திறமாகவும் வேண்டும்.'

வானதியின் இரண்டாவது வளர்ச்சிக் கட்டம் இங்கேதான் ஆரம்பமாயிற்று.

திருநாவுக்கரசு அவர்கள் சொல்கிறார்: 'வெங்காயத்தை உரிக்க உரிக்கச் சருகான பாகம் நீங்கி வெண்மையான பாகம் தென்படுவதைப் போல, சந்தர்ப்பங்களால் தட்டிக் கொட்டி மடக்கப்பட்டு, பிறகு நேராக நிமிர்ந்து கொண்ட என்னுள் எண்ணங்கள் வளர்ந்தன. வாசகர்களின் தேவையை வைத்து நூல்கள் வெளியிடுவதோடு, இலக்கியத் தேவைக்காகவும் நூல்கள் வெளியிடவேண்டும் என்று எண்ணினேன். பக்தி இலக்கியங்களையும், பழம் இலக்கியங்களையும் நூல் வடிவில் கொண்டு வந்தேன். புகழ்பெற்ற ஆசிரியர்களை

தைரியம்

தைரியம் என்பது சரீரத்தின் இயல்பல்ல, அது ஆத்மாவின் இயல்பே. தைரியவானுக்கு ஆயுதங்கள் கடைசித் தேவைகளாகத்தான் இருக்கின்றன.

— காந்தியடிகள்

அணுகினேன். அவர்கள் என் வேண்டுகோளுக்கு இணங்கி அன்போடு தம் படைப்புக்களைத் தந்தார்கள். தொடர்ந்து தந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி நல்ல பல எழுத்தாளர்களின் புத்தகங்களை வெளியிட்டதால், விற்பனை வெள்ளமாகப் பெருகியது. அதுவரை அலைகளும் கொந்தளிப்பும் நிறைந்த தொழிலில் துடுப்பைப் போட்டுத் தள்ளிக் கொண்டிருந்த நிலைமை மாறி, பாய் விரித்துச் செல்லும் படகு போல வானதி வளர்ச்சி பெற்றது.'

திருநாவுக்கரசு அவர்கள் அடக்கமானவர். 'வானதியின் வளர்ச்சிக்கு எழுத்தாளர்களே முழுக் காரணம்' என்று அவர் சொல்வதை, நான் ஒப்ப மாட்டேன். வளர்ச்சிக்கு எழுத்தாளர்கள் முக்கிய காரணம் என்றால் இன்னொரு முக்கிய காரணம் அவருடைய விடா உழைப்பு. விற்பனை வளர்ச்சிக்காக அவர் தன் குடும்பத்தை விட்டு வருடத்தில் ஆறுமாதங்கள் ஊர் ஊராகப் பறந்துகொண்டிருப்பார். பார்க்க முடியாத மனிதர்களைப் பார்ப்பார். போக முடியாத ஊருக்குப் போவார். விற்க முடியாதவர்கள் என்று பலரால் ஒதுக்கப்பட்டவர்களிடம் நூல்களை விற்பார். இந்த வகைகளில் வானதியை வளர்த்து தன் சரீரத்தை வாட்டிக் கொண்டவர் அவர்.

வானதியில் ஐநூறுக்கும் அதிகமான நூல்கள் வெளியாகி இருப்பதாக ஓர் இடத்தில் சொல்லி இருக்கிறேன். 'இலக்கியம், வரலாறு, சமூகம், சட்டம்' என்று தொகைப்படுத்திய மிகப் பிரபலமான நூல்களையும், பெண்களுக்கெனவும், குழந்தைகளுக்கெனவும் வகைப்படுத்திய நூல்களையும் வானதி வெளியிட்டிருக்கிறது. பிரபல எழுத்தாளர் சாண்டில்யன் அவர்கள் எழுதிய 'கடல்புறா' என்ற நவீனத்தை நாற்பது ரூபாய் விலையில் வெளியிட்டிருக்கிறது வானதி. இந்தியாவில் வெளிவந்த புத்தகங்களுள் இதுவே அதிக விலையுள்ள புத்தகமாகும். இத்தனை அதிக விலையுள்ள நூல், மூன்று வருடங்களுள் இரண்டு பதிப்புகள் வெளியாகி இருக்கிறது! சாண்டில்யன் எழுதிய இன்னொரு நவீனம் யவன ராணி. இருபத்தைந்து ரூபாய் விலையுள்ள இந்த நவீனம், இதுவரை இரண்டு பதிப்புகள் வெளியாகி, இப்போது மூன்றாவது பதிப்பு வெளியாக இருக்கின்றது. திரு. சம்பந்தம் எழுதிய 'நேருஜியின் வாழ்க்கை வரலாறு' என்ற நூல் இருபதாயிரம் பிரதிகளும், திரு. அ. மறைமலையான் எழுதிய 'பேரறிஞர் அண்ணாவின் பெரு வாழ்வு' என்ற நூல் ஒரே வருடத்தில் பதினையாயிரம் பிரதிகளும் விற்பனையாகி இருக்கின்றன. வானதியின் வெளியீடுகளான 'வாழ்க்கையில் வெற்றி பெறுவது எப்படி?' என்ற நூல் ஐந்து பதிப்புகளும், 'குடும்பத்தில் பெண்ணின் கடமை' என்ற நூல் ஏழு பதிப்புகளும் வந்திருக்கின்றன. வானதியில் நான்கு ஐந்து பதிப்புகள் வெளியான நூல்கள் நூறுக்கும் மேற்பட்டவை.

'திருக்குறள் உரைக் களஞ்சியம்' ஆயிரம் பக்கங்களில் ஆங்கிலக் கருத்துரையுடன் வெளியிட்டிருப்பது அவருடைய மற்ருெரு சிறந்த சாதனையாகும். இந்நூல் அமெரிக்கப் பல்கலைக் கழக நூலகங்களில் இடம் பெற்றிருக்கிறது.

இப்பொழுது வானதியிலிருந்து மிகப் பரபரப்போடு அதிகமாக விற்பனைக்குப் போய்க் கொண்டிருப்பவை, 'தேசீயத் தலைவர்கள் வரலாற்று வரிசை' நூல்கள்.

வானதியின் - தரம் - தயாரிப்பு - விற்பனை

சுண்டிப் பார்த்தால் 'ணங்' கென்று ஒலிக்கும் தரமான நூல்களை மட்டுமே கண்டிப்பாக வெளியிடுகிறது வானதி. ஜெமினி இரட்டையர், எம். ஜி. எம். சிங்கம் என்று தொழிற் சின்னங்கள் பிரபலம் அடைந்திருப்பதுபோலவே வாசகர் உலகத்தில் வானதியின் யானைச் சின்னம் மிகப் பிரபலம் பெற்றிருக்கிறது. நம்பிக்கை, நாணயம் இவற்றின் மூலம் பெற்ற இந்தப் பிரபலத்தைக் கட்டிக் காப்பதற்கு, நூல்களை எப்படி எல்லாம் வடிகட்டிக் கொணடு வரவேண்டும் என்பதை நன்ருக உணர்ந்திருக்கும் திருநாவுக்கரசு அவர்கள், விலை கொடுத்து வாங்கிய பல நூல்களை வெளியிடாமல, திறக்க முடியாத பெட்டியில் போட்டுப் பூட்டி வைத்திருக்கிருர்.

வானதியின் புத்தகத் தயாரிப்பில் திருநாவுக்கரசின் இருபத்திரண்டு வருடத்திய அனுபவ முத்திரையைக் காணலாம். வானதியின் நூல்கள் எங்கிருந்தாலும் பளிச்சென்று தெரியும். அந்தக் காலத்திய திருநாவுக்கரசின் புத்தக அட்டைகளில் கவர்ச்சி அதிகம். இந்தக் காலத்திய திருநாவுக்கரசின் புத்தக அட்டைகளில் கண்ணியம் அதிகம். இந்தக் கண்ணியமே ஒரு கவர்ச்சியாகப் பொலிகிறது.

சில பதிப்பாளர்கள் 'படிப்பதற்கு நிறைய விஷயம் தருகிருேம்' என்று பக்கம் முழுவதும் 'கம்போஸ்' செய்து வைப்பார்கள். படிக்கும்போது வேலி ஏறிக் குதிப்பதுபோல மயக்கம் ஏற்படும். திருநாவுக்கரசு வாசகர்களை அப்படி யெல்லாம் வேலி ஏறிக் குதிக்க விடமாட்டார். தென்றல் ஊர்ந்து வருவதுபோல வாசகர்களோடு சேர்ந்து பக்கங்களும் ஊர்ந்து வரும். அவ்வளவு தென்றல் சுகத்தைத் தயாரிப்பில் காட்டுவார் திருநாவுக்கரசு. அச்சுப் பிழைகளை அவர் மன்னிக்க மாட்டார். அச்சுப் பிழைகளை விட்டு வாசகர்களிடம் மன்னிப்பும் கோர மாட்டார். அச்சுப் படிவத்தைத் திருத்துவதற்கென்றே, அதில் அனுபவம் உள்ள எழுத்தாள நண்பர்களைத் தம்மோடு வைத்துக் கொண்டிருக்கிருர்.

நூலகங்களையும் ஊராட்சி ஒன்றியங்களையும் நம்பியே பாதிவழியிலே பதிப்பாளர்களாக வந்து சேர்ந்தவர்கள் பலர் இருக்கிருர்கள்.

திருநாவுக்கரசு அவர்கள் மக்களை நம்பியே புத்தகத் தொழிலுக்கு வந்தவர். இன்னும் இவர் மக்களை நம்புகிருர். மக்களும் இவர் நம்பிக்கைக்குப் பூரண ஆதரவளித்து அதை நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டிருக்கிருர்கள்.

அவர் சொல்கிருர்: "மக்களுக்காகவே நான் நூல்களை வெளியிடுகிறேன். அவற்றை நூலகங்களும் வாங்கிக் கொள்கின்றன."

'நூலகங்களும்' என்று அவர் சொன்னதில் அந்த 'உம்'முக்கு

அகிம்சை

உண்மை எனது தெய்வம்; அகிம்சை அத்தெய்வத்தை அடையும் வழி. சினம் அகிம்சையின் பகைவன்; கர்வம் அகிம்சையை விழுங்கும் பூதம். .

— காந்தியடிகள்

எத்தனை பொருள்கள் உண்டு என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

'நூலகங்கள் நூல்களை ஆர்வத்துடனும், ஆதரவுடனும் வாங்கவில்லை' என்பது ஒரு பொருள். நாடு அடிமைப்பட்டிருந்த காலத்தில் மக்கள் முட்டாள்களாக இருக்க வேண்டும் என்பதில் ஆளவந்தார்கள் மிகக் கவனமாக இருந்தார்கள். மக்கள் முட்டாள்களாக இருக்கும் வரையில்தான் குதிரை ஏறலாம் என்று அவர்கள் நினைத்தார்கள். அந்தக் காலம் மலை ஏறிவிட்டது. நாடு சுதந்திரம் அடைந்து விட்டது. மக்கள் புத்திசாலிகளாக இருக்க வேண்டும் என்பதில் ஏன் இவர்களுக்கு அக்கறை இல்லை? அக்கறை இருந்தால் அறிவைப் புகட்டக்கூடிய நூல்களை, உணவைக் காட்டிலும் முக்கியமாக நினைத்து, நூலகங்களின் மூலம் மக்களுக்கு வழங்குவார்களே' என்பது இன்னொரு பொருள். 'ஏராளமான நூலகங்கள் இருக்கின்றன. அவற்றைப் பராமரிக்கும் செலவைச் சரிக்கட்ட முடியாமல் திணறுகிறார்கள். அகலக் கால் வைத்ததன் கோளாறு, நூல்களை வாங்க வேண்டிய தொகை, பராமரிப்புச் செலவில் விரயமாகிறது' என்பது மற்றொரு பொருள்.

''நான் சொல்வது சரிதானா?'' என்று திரு ரூணாவிடம் கேட்டேன்.

''நான் பதிப்பாளன். உங்களைப்போல எதையும் சொல்லும் சுதந்திரம் எனக்கில்லை'' என்று சிரித்தார் அவர்.

சுதந்திர நாட்டில் அபிப்பிராயம் சொல்லச் சுதந்திரம் இல்லையா?

நான் சிந்திக்கிறேன்.

அவர் ஒரு மலேஷியா வியாபாரிக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்.

வானதியும் எழுத்தாளர்களும்

வானதிக்கும் எழுத்தாளர்களுக்கும் உள்ள உறவு தேனாறும்திருவாசகத்தைப் போன்றது. வானதியின் குடும்பத்தில் நூறு எழுத்தாளர்களுக்குக் குறையாமல் இருக்கிறார்கள். அந்த நூறு எழுத்தாளர்களின் இன்ப துன்பங்களில் இரண்டறக் கலந்தது வானதி. இந்த நெகிழ்ச்சியான உறவுதான் வானதியின் ஆணிவேர்.

நாமக்கல் கவிஞர், சாண்டில்யன், ஜெகசிற்பியன், ஆர்வி, ரா. கி. ரங்கராஜன், எல்லார்வி, கோவி. மணிசேகரன், ப. ரா. மாயாவி — இவர்களைப் போன்ற புகழ் பூத்த எழுத்தாளர்கள் வானதியின் அடர்ந்த கிளைகள். வானதிக்கு முதன் முதலாக நூல் எழுதி, இன்று பிரபலமாக இருக்கும் பல எழுத்தாளர்கள் 'வானதி' என்னும் ஆல விருட்சத்தில் காய்த்த கனிகள்.

வானதிக்கு ஏகபோக உரிமையாளர் திருநாவுக்கரசு அவர்கள்தான். ஆனால் அவருக்குக் கிடைக்கும் லாபத்தில் பங்கு பெறக்கூடிய பல பங்காளிகள் இருக்கிறார்கள். அவர்கள் எழுத்

தாளர்கள்! வருடந்தோறும் அவருடைய லாபத்தில் பாதியை 'சன்மானம்' என்ற வகையில் பங்காகப் பெறுகிறார்கள் அவர்கள்.

''அவர்கள் என் பங்காளிகள் மட்டுமல்லர்; என் உடன் பிறவா சகோதரர்கள்'' என்று பூரிப் போடும், சற்று தழு தழுப் போடும் சொல்கிறார் திருநாவுக்கரசு அவர்கள்.

முன்னேற்றத் தடைகள்

அறிவுத் துறைக்குப் பத்திரிகைகள் ஆற்றும் தொண்டுக்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல, பதிப்பகங்கள் ஆற்றும்தொண்டு. பத்திரிகைகளுக்குத் தாராளச் சலுகை காட்டும் தபால் நிறுவனம், பதிப்பகங்களின் விஷயத்தில் மாற்றாந் தாயாக நடந்து கொள்கிறது. புத்தகத் தயாரிப்புக்குள்ள இடையூறுகளில் மிகப் பெரிய இடையூறு, தபால் கட்டணச் சலுகை இல்லாததுதான்.

ஒரு ரூபாய் விலையுள்ள நூலொன்றைப் பதிப்பகத்திலிருந்து தருவிக்க விரும்பும் வாசகர், ஒரு ரூபாய், ஐந்து பைசா வரை தபால்கட்டணம் செலுத்த நேர்கிறது. ஆக ஒரு ரூபாய் புத்தகத்தைப் பெற, அவர் இரண்டு ரூபாய் ஐந்து பைசா செலவழிக்க வேண்டியதிருக்கிறது. 'சுண்டைக்காய் கால் பணம். சுமை கூலி முக்கால் பணம்' என்ற ரீதியில், எந்த வாசகர் புத்தகம் வாங்க முன் வருவார்?

'அறிவு வேண்டுமா உனக்கு? அப்படியானால் அபராதம் கட்டு' என்பதைப் போல அமைந்திருக்கும் தபால் கட்டணச் சுமையை அனுதாபத்தோடு குறைக்க தபால் நிறுவனம் முன் வர வேண்டும்என்பது திருநாவுக்கரசு அவர்களின் வேண்டுகோள்.

''புத்தகங்களில் அடுத்து வரும் நூல்களைப் பற்றிக் குறிப்பிடுகிறோம். அதையே விலைப்பட்டியலாகப் போட்டு நூலக ஆணைக் குழுக்களுக்கும் அனுப்பி வைக்கிறோம். நாங்கள் நூலகங்களுக்கு அனுப்பும் புத்தகங்களில் வெளியான எங்களுடைய அடுத்துவரும் நூல்களைப் பற்றிய விவரங்களைப் பார்த்து விட்டு, அவற்றைப் படிக்க ஆவல் கொள்கிறார்கள் வாசகர்கள். எங்களுக்கும் எழுதிக் கேட்கிறார்கள். நாங்கள் என்ன செய்ய முடியும்? எங்களுடைய விலைப்பட்டியலை எப்பொழுதோ ஆணைக்குழுக்களுக்கு அனுப்பி விட்டோம். அவர்களிடமிருந்து இன்னும் ஆர்டர் வரவில்லை. இப்பொழுது வராது. அந்த நூலின் இரண்டாவது பதிப்பு வெளியாகும் போதுதான் ஆர்டர் வரும். இந்த அவசியமற்ற காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும். வாசகர்களின் ஆவலையும், ஆர்வத்தையும் சிதற அடிக்காமல், அவர்கள் படிப்பதற்கு இசைவாக உடனடியாக நூல்களுக்கு ஆர்டர் கொடுக்க வேண்டும்!'' என்கிறார் திருநாவுக்கரசு அவர்கள்.

நியாயமான கோரிக்கை! புத்தகத் தொழில் வளர்ச்சி பெறுவதற்கும், வாழ்வதற்குமான கோரிக்கை!

அருள்கூர்ந்து ஆணைக்குழுக்கள் இதைக் கவனிக்குமாக.

ஐயாயிரம் மக்கள் வசிக்கும் ஊருக்கு ஒரு நூலகம் இருக்க வேண்டும் என்பது அரசின் திட்டம். அந்தத் திட்டத்தின்படி எல்லாஊர்களிலுமே நூலகங்கள் இருக்குமா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் பத்தாயிரம்

கையெழுத்து

மோசமான கையெழுத்தை, அரைகுறையான படிப்புக்கு அறிகுறியாகக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் என்னுடைய உதாரணத்தைக் கண்டாவது எச்சரிக்கையுடன் இருக்கட்டும்.

—காந்தியடிகள்

மக்கள் வாழும் பல நகர்களில் ஒரேயொரு நூலகம் மட்டும்தான் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அப்படி மக்கள் நிறைந்த நகரில் இருக்கும் ஒரே யொரு நூலகத்திற்கு ஒரேயொரு புத்தகம்தான் வாங்குகிறார்கள். ஓரிருமாதங்களுக்குள் அந்த ஒரே யொரு புத்தகம், அட்டையை இழந்து, பக்கங்களை இழந்து, கடைசியில் படிக்க முடியாமல் அதை இழந்து விடுகின்றனர். ஆயிரம் பேருக்கு ஒரு புத்தகம் வீதம் வாங்கலாமே! அதனால் புத்தகங்கள் விற்பனையாகின்றன. எல்லா வாசகர்களும் எங்கள் புத்தகங்களைப் படிக்கலாம்.

இதுவும் திருநாவுக்கரசு அவர்களின் கோரிக்கைதான்.

இதைக் கோரிக்கையற்றுப் பழுத்த பலாவாக நினைத்துவிட வேண்டாம். இது அறிவுப் பிரச்னை. ஆவன செய்க.

வானதியின் எதிர்காலத் திட்டம்

அறிவியல், தொழில்துறை நூல்களைக் கொண்டு வரவேண்டும் என்பது திருநாவுக்கரசு அவர்களின் ஆவல். அந்தந்தத் துறையில் வல்ல அறிஞர்கள் ஒருங்கிணைந்து ஆக்கித்தர வேண்டிய நூல்கள் இவை. நல்ல உயர்ந்த காகிதத்தில், ஏராளமான விளக்கப் படங்களுடனும், நல்ல கட்டடத்துடனும் வர வேண்டியவை இவை. தயாரிப்புச் செலவு அதிகமாகும். பொதுச் சந்தையில் விற்பனையை எதிர் பார்க்க முடியாது. எனவே, அரசு ஒவ்வொரு நூலகத்திலும் ஒவ்வொரு பிரதி வாங்கி வைப்பதாக உறுதி கூறி, ஆதரிக்க முன் வந்தால், இந்தச் சீரிய பணியைச் சிரமம் இல்லாமல் செய்து முடிக்கலாம் என்பது அவர் எண்ணம்.

மலிவு விலையில் நூல்களைக் கொண்டு வரவேண்டும் என்பது திருநாவுக்கரசு அவர்களின் அடுத்த திட்டம். 'விலைதான் மலிவாக இருக்க வேண்டுமே தவிர, தயாரிப்பும் மலிவாக இருந்து விடக்கூடாது' என்று அடிக்கடி சொல்வார்.

இந்த விஷயத்தில் அவர் சொன்னதைச் செய்யமாட்டார். ஏனென்றால் அவருக்கு 'மலிவாக'த் தயாரித்துப் பழக்கம் இல்லை!

வீடு கட்டுவதைப் போல, கார் வாங்குவதைப் போல, அணிகள் வாங்குவதைப் போல வசதி படைத்தோர் அனைவரும் 'வீட்டுக்கொரு நூல் நிலையம்' என்பதை அவசியத் தேவையாகக் கருத வேண்டும். இப்பொழுது இந்த வகையான பிரசாரத்தை அனைவரும் செவி சாய்த்துக் கேட்கிறார்கள். வீட்டில் ஒரு நூல் நிலையத்தை அமைத்துக் கொண்டால், அந்த வீட்டில் ஓர் அறிஞர் கூட்டம் இருப்பதாகப் பொருள்.

அறிஞர்களின் அவசியத்தை உணராதவர் யாரும் இல்லையே!

'வீட்டுக்கு ஒரு நூல் நிலைய'த்துக்கான புத்தகங்களைத் தயாரிப்பதும் வானதியின் எதிர்காலப் பணிகளில் ஒன்றாகும்.

காந்தி நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்

இப்பொழுது, இந்த நிமிடத்தில் திருநாவுக்கரசு அவர்களின் சிந்தை எல்லாம் நிறைந்திருப்பது 'காந்தி நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்'

காந்தியக் கோட்பாடுகளில் ஆழ்ந்த பற்றுள்ள அவருக்கு, ஒன்றே ஒன்றில் சிறந்த ஈடுபாடு.

'காந்தி சொன்னபடி நடந்தார்.' இந்த வார்த்தைகளை, அவர் அடிக்கடி சொல்லி மெய்யுருகிப் போவார்.

மெய்யுருகுவதற்கு இதைவிட வேறென்ன வேண்டும்?

சிலர் சிலருக்காகச் சொன்னார்கள், பலர் பலருக்காகச் சொன்னார்கள். ஆனால் தனக்காக யார் சொல்லிக் கொண்டார்கள்? காந்தியைத் தவிர வேறு யாரும் தனக்காகச் சொல்லிக் கொள்ளவில்லை.

தன்னையே புடம் போட்டுக் கொண்ட எம்மான், மனிதர் குலப் பெம்மான் காந்திக்கு, 'நன்றியுள்ளவர்கள் நாங்கள்' என்று சொல்லிக் கொள்வதைப் போல நாம் நூற்றாண்டு விழா எடுக்கிறோம் அல்லவா?

அந்த விழாவை ஒட்டி இலக்கிய மலர் எடுத்து, மகாத்மாவை அர்ச்சிக்க விழைந்த திருநாவுக்கரசு அவர்கள், 'காந்தி நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்' ஒன்றைப் பெரிய அளவில் தயாரிக்கும் பணியில் இரவு பகலாக முனைந்து செயல் புரிகிறார். அந்த மலர், 'காந்தி சகாப்தத்தின் அரிய பெரிய சாஸனமாக அமைந்திருக்க வேண்டும்' என்பது அவர் விருப்பம். இப்பொழுதெல்லாம் அவர் அந்த விருப்பத்தையும், மகாத்மாவையும் நாடியே ஒவ்வோர் அடியையும் எடுத்து வைக்கிறார்.

காந்திஜி-நேருஜி-தந்தை கல்கி-திருநாவுக்கரசு

வளமார்ந்த வானதியின் திறமார்ந்த செயலகம் இது.

அறிவாலேயே ஒரு வீடு கட்டிக் கொண்டிருப்பதைப் போல நாற்புறமும் சூழ்ந்த நூல்களுக்கிடையே திருநாவுக்கரசு அவர்கள் இதோ வீற்றிருக்கிறார். அவர் தலைக்கு மேலே முருகன். அவன் தமிழுக்குத் தலைவன். அவருக்கு வலது பக்கத்திலே காந்திஜி. அவர் அஹிம்சா ஜோதி. பக்கத்திலே நேருஜி. அவர் தியாகச் செம்மல். இருவருக்கும் நடுவே திருநாவுக்கரசின் தந்தை அமரர் ஏகப்ப செட்டியார் அவர்கள். அவர் சத்தியத்தின் உருவம். எதிரே கல்கி, அவர் மறுமலர்ச்சித் தமிழின் தலைவர்.

தமிழுக்குத் தலை வணங்கி, சத்தியத்துக்கு அடிபணிந்து, தியாகத்தில் நீராடி, மறுமலர்ச்சி இலக்கியத்தில் தோணி செலுத்தும் வானதி திருநாவுக்கரசு அடக்கத்துடன் கூறுகிறார்: 'என் கடன் இலக்கியப் பணி செய்து கிடப்பதே!'

○

மகாகவி ஜி. சங்கர குறுப்பு

மணவை முஸ்தபா



'ஜி' என்ற சிறப்புப் பெயரால் இந்தியாவெங்கும் நன்கு அறிமுகமாகியுள்ள மகாகவி ஜி. சங்கர குறுப்பு இன்றைய மலையாளக் கவிஞர்களிடையே குறிப்பிடத் தக்க சிறப்பிடத்தைப் பெற்றுத் திகழும் பெருங் கவிஞராவார்.

இயற்கை வளங்கொழிக்கும் காலடிக் கருகிலுள்ள கிராமமொன்றில் 1901 ஆம் ஆண்டு பிறந்த சங்கர குறுப்பு இளமை முதலே இயற்கையின் வயப்பட்டவராக—இயற்கையின் இரகசியங்களை அறியும் முயற்சியுடையவராக-ஆரம்ப நாட்களில் இயற்கையின் பேரெழிலை, படைப்பு இரகசியங்களை அடித்தளமாகக் கொண்ட கவிதைகளைப் புனைந்தார். வெறும் இயற்கை நலம் பாராட்டும் கவிஞராகவே தாம் அமைந்து விடாது, இயற்கையின் தன்மைகளை வாழ்க்கையின் ஆத்மப் பிரச்சினைகளோடு இணைத்துப் பாடும் தத்துவக் கவிஞராகப் பின்னர் மலர்ந்தார்.

மலையாள மொழியில் வித்துவான் பட்டம் பெற்று ஆசிரியத் தொழிலை மேற்கொண்ட கவிஞர் ஆங்கில மொழியையும் தாமே படித்து விரைவில் புலமை பெற்றார். அதன் விளைவாக அவரது கவிதையாற்றல் பன்மடங்கு விரிவடைந்தது. மேனாட்டுக் கவிஞர்களில் ஷெல்லியின் செல்வாக்கும் இந்தியக் கவிஞர்களில் தாகூரின் செல்வாக்கும் பிற்காலத்தில் இவர் கவிதைகளில் பெரிதும் எதிரொலிக்கத் தொடங்கின. கற்பனையே கவிதைக்கு அடித்தளம் என்ற நிலைமாறி, கருத்தும் சிந்த

னேயுமே கவிதையின் உயிர் நாடி என்ற அடிப்படையில் இவரது கவிதைப் படைப்புகள் வெளிவரலாயின. இயற்கைத் தத்துவங்களை இம்முறையில் வெளிப்படுத்த முயலும் சங்கர குறுப்பு மிகச் சிறந்த 'மிஸ்டிக்' கவிஞராகத் திகழ்கிறார். இவர் 'மிஸ்டிக்' கவிஞராகப் பரிணமிக்க காரணமாயமைந்தவைகளில் மிக முக்கியமானது தாகூரின் கவிதைப் படைப்புகளாகும். 'அன்வேஷணம்' (தேடுதல்), 'மங்கள கீதம்,' 'சாக்ஷாத்காரம்' முதலிய கவிதைப் படைப்புகள் இதற்குத் தக்க சான்றுகளாகும்.

மாலையில் எழும் நிலவு, உதய நட்சத்திரம், செக்கர் வானம், வைகறைப் பொழுது, மேகங்கள், கடல், மலை ஆகிய அனைத்தையும் தம் கவிதைகளில் குறிப்புப் பொருள்களாக—மனிதனின் ஆத்மாவோடு தொடர்பு கொண்ட குறியீடுகளாக இவர் தம் கவிதைகளில் திறம்பட வெளிப்படுத்துவதன் மூலம் சிறந்த 'ஸிம்பாலிக்' (உருவக) கவிஞராகவும் திகழ்கிறார்.

இந்தியக் கவிஞர்களிலேயே ஒரு யுகக் கவிஞர்களாக தாகூரையும் கவி சுப்பிரமணிய பாரதியாரையும் கருதும் சங்கர குறுப்பு தாகூரின் கீதாஞ்சலியை மூலத்திலிருந்து நேரடியாக மொழி பெயர்க்க எண்ணித் தனது 55ஆம் வயதில் வங்க மொழி பயின்று 'கீதாஞ்சலி'யை மலையாளத்தில் பெயர்த்தார். இவரது புகழ் பெற்ற மலையாள மொழி பெயர்ப்புக் கவிதை நூல்களில் குறிப்பிடத் தக்கவை உமர் கய்யாமின் காதல் கவிதைகளின் மொழி பெயர்ப்பான 'விலாச லஹரி'யும் காளிதாசனின் 'மேக தூத'த்தின் மறு உருவான 'மேக சந்தேச'மும் ஆகும்.

மனத்திண்மை

பல கல்லூரிகளில் படித்தாலும், மனத்தை அடக்கி ஆளும் சக்தி இல்லாவிட்டால் ஷேக்ஸ்பியர், வேர்ட்ஸ் வொர்த் புத்தகங்களைப் படித்தது வீணே.

— காந்தியடிகள்

இவர் வெறும் தத்துவக் கவிஞர் மட்டுமல்லர். நாட்டுப் பற்றில் இமயம் போல் விளங்கும் இவர், சமுதாயக் கோணல் நிலைகளைத் தம் கவிதைகளில் சாடத் தவறியதேயில்லை. இவரது படைப்புகளில் பொதுவுடமை உணர்வும் விஞ்ஞான உணர்வும் பொங்கி நிற்பதைக் காணலாம். 'அம்மாமன் ஆசீர்வதிக்குந்நு' (மாமன் ஆசீர்வதிக்கிறார்) என்ற படைப்பில் இருபாத்திரங்களான உலகமும் சந்திரனும் விஞ்ஞான விளைவுகளைக் குறித்து விஞ்ஞான மொழியில் பேசுவது சுவையானதாகும். மற்றும், 'ஸாஹித்ய கௌதுகம்,' 'சூரிய காந்தி,' 'நிமிஷம்,' 'வனகாயகன் செங்கதிர்கள்,' 'பதிகன்டே பாட்டு' (வழிப் போக்கன் பாடல்) 'ஓடக்குழல்,' 'அந்தர்ஹாம்' (உள்ளத்து வேட்கை) 'வெள்ளிப் பறவை,' 'பாதேயம்' (வழிச் சோறு) முதலிய கவிதைத் தொகுப்புகளை வழங்கியுள்ளார்.

'இருளின்னு மும்பு' (இருளுக்கு முன்பு) 'ஆகஸ்ட் 15,' 'சந்த்ய' (மாலைப்போது) ஆகிய நாடகங்களும், 'கத்யோபஹாரம்', 'லேக மாலா', 'முத்துச் சிப்பி', 'ராக் குயில்கள்' ஆகிய தலைப்புகளில் வெளி வந்துள்ள கட்டுரைத் தொகுப்புகளும், 'இராதா ராணி', 'ராஜ நந்தினி' ஆகிய இரண்டு கதைத் தொகுதிகளும்

குறிப்பிடத் தக்கப் படைப்பு களாகும்.

இவற்றுள் 'ஓடக் குழல்' கவிதைத் தொகுப்பு 1966 ஆம் ஆண்டு பாரதீய ஞான பீடத்தின் ஒரு இலட்சம் ரூபாய் சிறப்புப் பரிசைப் பெற்றது.

ஆசிரியத் தொழிலே மேற்கொண்டிருந்த காலத்தில் இவர் எழுதிய பாட நூல்கள் மிகவும் புகழ் பெற்றவைகளாகும். அவை இன்றும் கேரளப் பள்ளிகளில் பாடப் புத்தகங்களாக மாணவர் கரங்களில் தவழ்ந்து அறிவுச் சுடர் கொளுத்தி வருகின்றன.

உணர்ச்சி பொங்க நீண்ட நேரம் சொல்லாட வல்ல நாவலரான இவரது தலைமையின் கீழ் 'ஸாஹித் பரிஷத்' எனும் இலக்கிய அமைப்பு பெரும் பயன் ஈட்டியது எனலாம். நீண்ட காலம் ஆசிரியத் தொண்டும், குறுகிய காலம் அனைத்திந்திய வானொலியிலும் பணியாற்றி ஓய்வு பெற்ற சங்கர குறுப்பு இன்று மாநிலங்களவை உறுப்பினராகவும் பல்வேறு இலக்கிய அமைப்புகளில் தொடர்பு கொண்டும் பணியாற்றி வருகிறார்.

மலையாளக் கவிதை இலக்கிய உலகில் ஆசானுக்கும் வள்ளத்தோலுக்கும் அடுத்த இடத்தைப் பெறும் மகாகவி ஜி. சங்கர குறுப்பு இன்று இந்தியா முழுமைக்குமான மறுமலர்ச்சிப் பெருங் கவிஞராகத் திகழ்ந்து வருகிறாரெனில் மிகையன்று.

வரி விளம்பரங்கள்

வசதியாகத் தங்குவதற்கு லாட்ஜ்.

நாகர்கோயில் வரும் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான இடம் : ''கைலாஸ் லாட்ஜ்'' பஸ் நிலையம் சமீபம், மீனாட்சிபுரம், நாகர் கோயில் - 1.

Kailas Lodge
Meenakshipuram
Nagercoil – 1
Phone. 239

கல்லூரி, பள்ளி புத்தகங்கள்

உயர் நிலைப் பள்ளி, கல்லூரி, நூலகங்களுக்குத் தேவையான ஆங்கிலம், தமிழ்ப் புத்தகங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

Xcel - Choix
Book Sellers & Publishers
114, Poonamallee High Road
Madras - 29.

புத்தகங்கள்

எம்மிடம் நாவல் புத்தகங்களும், ஜோதிட, கைரேகை, வைத்திய நூல்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். வியாபாரிகள் விபரம் எழுதித் தெரிந்து கொள்ளவும். தொடர்பு கொள்ள இன்றே எழுதுங்கள்.

·D. தேவதாஸ்
புக்செல்லர்ஸ்
29, மேலப்பாண்டியன் அகிழ்தெரு, மதுரை-1

செய்திகள்

கன்னிமாராப் பொது நூலகம்

1969 ஆகஸ்டு மாதத்தில் கன்னிமாராப் பொது நூலகத்தில் 82 புதிய அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொண்டதன் மூலம் மொத்த அங்கத்தினர் தொகை 742க்கு உயர்ந்துள்ளது. 14,086 வாசகர்கள் 53,607 நூல்களைப் பயன்படுத்தியுள்ளனர். 11,349 நூல்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்று படிக்க அனுமதிக்கப்பட்டன.

அனைத்துலக அறிவியக்க நாள் விழா சென்னை

சென்னை மாவட்ட மத்திய நூலகக் கட்டிடத்தில் 'அனைத்துலக அறிவியக்க நாள் விழா' 8-9-69 மாலை 4-30 மணிக்கு தமிழகப் பொது நூலகத்துறை இயக்குனர் திரு. வி. டி. டைட்டஸ் தலைமையில் கொண்டாடப் பட்டது.

திருச்சி

திருச்சி மாவட்ட மத்திய நூலகக் கட்டிடத்தில் 'சர்வதேச எழுத்தறிவு தினம்' மூன்றும் ஆண்டு வீழா 12-9-69 மாலை 5 மணிக்கு மாவட்டக் கல்வி அலுவலகத் தனி அலுவலகர் திரு. S. இராமன் M. A., L.T. அவர்கள் தலைமையில் கொண்டாடப் பட்டது. குமரி தனிப் பயிற்சிக் கல்லூரி முதல்வர் திரு. M. S. நாடார் M. A., புனித அர்ச் சூசையப்பர் கல்லூரி விரைவுரையாளர் திரு. ராம்போலா மாஸ்கரனேஸ் M. A. ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தஞ்சை மாவட்டம் நன்னிலம்

நன்னிலம் கிளை நூலகத்தில் 8-9-69 மாலை 5-30 மணியளவில் திரு. கோவிந்தராாசள் தலைமையில் 'அகில உலக எழுத்தறிவு தின' விழா நடைபெற்றது. பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். கிளை நூலகர் திரு. எம். கே. சர்புதீன் நன்றி நவின்றார்.

முத்துப் பேட்டை

முத்துப்பேட்டை கிளை நூலகத்தில் 8-9-69 அன்று அனைத்துலக எழுத்தறிவு நாள்' விழா நடைபெற்றது. 'எழுத்தறிவு இயக்கம்' பற்றி திரு. ஏ. ஜெயராமனும் மற்றும் பல அறிஞர்களும் சொற்பொழிவாற்றினர். கிளை நூலகர் திரு. வே. கோவிந்தராாசன் நன்றி கூறினார்.

சூரக்கோட்டை

சூரக்கோட்டை கிளை நூலகத்தில் 8-9-69 மாலை 4 மணிக்கு 'சர்வதேச எழுத்தறிவு தின விழா' திரு. R. பாலசுப்ரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர்.

மாத்தூர்

மாத்தூர் கிளை நூலகத்தில் 8-9-69 மாலை 4 மணிக்கு 'அகில

உலக எழுத்தறிவு தினம்' திரு. T. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் சிறப்புடன் கொண்டாடப்பட்டது. திரு. M. அப்துல் மஜீது சொற்பொழிவாற்றினார்.

தில்லைவிளாகம்

தில்லை விளாகம் கிளை நூலகத்தில் 8-9-69ல் 'அகில உலக எழுத்தறிவு தின' விழா திரு. G. ராமமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல அறிஞர்கள் சொற்பொழி வாற்றினர். துணை நூலகர் ந. குழந்தைவேலு நன்றி நவின்றார்.

திருமுல்லைவாசல்

திருமுல்லைவாசல் கிளை நூலகத்தின் சார்பில் 8-9-69 மாலை 5 மணிக்கு 'அகில உலக அறிவியக்க நாள்' விழா ஊராட்சி மன்றத் தலைவர் திரு. C. முத்தையா பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல அறிஞர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். துணை நூலகர் சிங்காரவேலு சொற்பொழிவாற்றினார்.

காவேரிப்பூம்பட்டினம்

காவேரிப்பூம்பட்டினம் கிளை நூலகத்தில் 8-9-69ல் அனைத்துலக எழுத்தறிவு தின விழா ஊராட்சி மன்றத் தலைவர் திரு. N. தியாகராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. S. கணேசன் M. L. A. தமிழாசிரியர் திரு. M. சௌந்தரராஜன், திரு. K. சுப்ரவேலு M. P. ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். துணை நூலகர் திரு. P. சுப்பையன் நன்றி நவின்றார்.

நாங்கூர்

நாங்கூர் கிளை நூலகத்தில் 8-9-69ல் அகில உலக எழுத்தறிவு தினம் திரு. A. ராமகிருஷ்ணன் B.A அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. K. சோமசுந்தரம், திரு. R. சச்சிதானந்தம் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர். துணை நூலகர் கோ. நாராயணசாமி நன்றி கூறினார்.

கோவை மாவட்டம்
கள்ளிப்பட்டி

கள்ளிப்பட்டிக் கிளை நூலகத்தில் 8-9-69ல் சர்வதேச எழுத்தறிவு நாள் கொண்டாடப்பட்டது. வாசகர் வட்டத் தலைவர் கே. பி. இரவீந்திரன் தலைமையில் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர்.

ஊத்துக்குளி

ஊத்துக்குளி கிளை நூலக வாசகர் வட்டத்தின் சார்பில் திரு. ஏ. கே. எஸ். மணியம் தலைமையில் 8-9-69ல் அனைத்துலக எழுத்தறிவு நாள் விழா கொண்டாடப்பட்டது. பலர் சொற்பொழிவாற்றினர். துணை நூலகர் ப. சண்முகம் நன்றி கூறினார்.

சங்கனூர்

சங்கனூர் கிளை நூலகத்தில் 8-9-69ல் சர்வதேசஎழுத்துரிமை நாள் கொண்டாடப்பட்டது. கிளை நூலகப் பொறுப்பாளர் தேவராஜ் தலைமையில் ஒரு கருத்தரங்கும் நடைபெற்றது.

திருமுருகன் பூண்டி

8-9-69ல் திருமுருகன் பூண்டி கிளை நூலகத்தில் திரு. சு. துரை

சாமி தலைமையில் சர்வதேச எழுத்தறிவு விழா கொண்டாடப் பட்டது. கிளை நூலகர் அபீத்தா ரஹிமான் நன்றி கூறினார்.

தாளியூர்

தாளியூர் கிளை நூலகத்தில் 8-9-69ல் சர்வதேச எழுத்தறிவு நாள் பேரூராட்சி மன்ற நிர்வாக அதிகாரி திரு. S. A. குப்புசாமி தலைமையில் சிறப்புடன் கொண்டாடப் பட்டது. இலக்கிய நயத்துடன் சிலர் சொற்பொழிவாற்றினர்.

நீலகிரி மாவட்டம்
குன்னூர்

குன்னூர் கிளை நூலகத்தில் 8-9-69ல் சர்வதேச இலக்கிய தினம் திரு. P. M. வர்கீஸ் தலைமையில் கொண்டாடப்பட்டது. பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர்.

இராமநாதபுரம் மாவட்டம்
புது மடம்

புதுமடம் கிளை நூலகத்தின் 'நூலக நண்பர்கள் சங்கம்' ஆரம்ப விழா 31-8-69ல் நூலகக் கட்டிடத்தில் திரு. சங்கரநாராயணன் தலைமையில் நடைபெற்றது. திரு. சேகு அப்துல்காதர் தலைவராகவும், திரு. S. ஜாபருல்லாகான் துணைத் தலைவராகவும், திரு. N K. குத்தூஸ் B Sc. துணைச் செயலாளராகவும், துணை நூலகர் திரு. அபுசாலிகு செயலாளராகவும் திரு. S சாகிபு கான் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மதுரை

மதுரை இலக்கிய வட்டம் செப்டம்பர் மாதம் முதல் ஞாயிறு அன்று கூடி, வாசகர் வட்ட வெளியீடான கு. ப. ரா.வின் 'சிறிது வெளிச்சம்' தொகுப்பை விவாதித்தது. சிறு கதைகளுக்கு முதல் ஸ்தானத்தையும், குறு நாவலுக்கு இரண்டாம் ஸ்தானத்தையும், கவிதைக்கு மூன்றும் ஸ்தானத்தையும் தந்ததோடு, மறைந்த இலக்கிய மேதையின் எழுத்துக்களை அளித்த வாசகர் வட்டத்திற்குப் பாராட்டும் தெரிவித்தது.

அச்சிறுபாக்கம்
(செங்கை மாவட்டம்)

அச்சிறுபாக்கம் கிளை நூலகத்தில் 18-9-69ல் ''அண்ணா பிறந்த நாள் விழா'' கொண்டாடப்பட்டது. அண்ணா எழுதியுள்ள புத்தகங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன. அண்ணாவின் உருவப் படத்தை மாண்புமிகு S. J. சாதிக்பாட்சா திறந்துவைத்தார்கள். கொளத்தூர் கோதண்டம் M.L.A. திரு P. S. எல்லப்பன் M.L.A. மற்றும் பலர் வருகை தந்தனர். துணை நூலகர் J. பூபாலன் அனைவரையும் வரவேற்றார்.

நான்குனேரி
(நெல்லை மாவட்டம்)

19-9-69 மாலை கிளை நூலகத்தில் பாரதி விழா கொண்டாடப்பட்டது. திரு தோத்தாத்ரி தலைமையில் ஊர்வலமும், பேராசிரியர் நா. வானவாமலை M.A.L.T. தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. பல அறிஞர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். பின்னர் கவிஞர் மாமு தபசு தலைமையில் கவியரங்கமும், பேச்சுப்போட்டியும் நடைபெற்றது. துணை நூலகர் திரு. சம்புநாதன் நன்றி நவின்றார்.

புத்தக விமரிசனம்

நடேசன் என் நண்பன்

மாணவர்களிடையே ஒழுங்கும் கட்டுப் பாடும் சீர் குலேந்து விட்டன என்ற குற்றச்சாட்டை இப்போதெல்லாம் அடிக்கடி கேட்டு வருகின்ருேம். சீர் குலேந்த ஒழுங்கையும் கட்டுப் பாட்டையும் எவ்வாறு சீர் பெறச் செய்வது என்பதை விளக்கும் அரிய நாவல் **'நடேசன் என் நண்பன்'**. இதை எழுதிய புவனே கலேச் செழியன் தலேமை ஆசிரியராகப் பணி புரிபவர். பல பள்ளிகளில் பணியாற்றி, பலதிறப்பட்ட மாணவர் குழாமையும், பள்ளி நிர்வாகிகளேயும் கண்டு பழகியவர். அவர் பெற்ற அனுபவங்களேக் கொண்டு இந்த நாவலே எழுதியுள்ளார். கவலேயே தன் குறிக் கோளாகக் கொண்டு பள்ளிக்கு வரும் மாணவன், தொல்லே தருவதற்காகவே பள்ளிக்கு வரும் மாணவன், பள்ளியின் நிர்வாகிகளுக்கு உறவினன் என்பதனுல் எதை வேண்டுமானுலும் செய்யலாம் என்ற எண்ணத்தோடு வரும் மாணவன் இப்படி பல்வேறு மாணவர்களேக் காட்டி, அவர்கள் பண் படுத்தப்பட்டுப் பக்குவமடைந்து, ஒழுங்கும் கட்டுப்பாடும் பெறுவதை உணர்த்துகிறது இந்நாவல். தென் ஆற்காடு மாவட்டத்துக்கே உரிய மொழியைக் கச்சிதமாக ஆசிரியர் கையாண்டிருப்பது கதைக்கு ஓர் அழகைத் தருகிறது. இந்நாவல் சிறுவர்க்காக எழுதப்பட்டது. எனினும் ஆசிரியர்களும், பள்ளி நிர்வாகத்தோடு தொடர்புடையவர்களும் படித்து பரவசமடையத் தக்க–பயன் பெறத் தக்க நல்ல நாவல் இது.

ஒவ்வொரு பொது நூலகத்திலும், குழந்தை நூலகத்திலும், பள்ளி நூலகத்திலும், கல்லூரி நூலகத்திலும் கூட கட்டாயம் வாங்கி வைக்க வேண்டிய நல்ல கதை–நீதி நூல் இது.

நூல்:நடேசன் என் நண்பன்
ஆசிரியர்:புவனே கலேச் செழியன்.
வெளியீடு:குழந்தை இலக்கியக் கழகம், சென்னே-1.

விற்பனே உரிமை:மனேண்மணி புத்தக நிலேயம், சென்னே-1. பக்கம் : 122. விலே: ரூ 2.50 பதிப்பு:ஜூலே 1969. குழந்தை இலக்கியக் கழக வெளியீடு. 8.

— பா. பெருமாள்.

அல்லி விழி

'அல்லி விழி' என்னும் தலேப்பைக் கொண்டுள்ள இது ஒரு கவிதை நூலாகும். இயற்கை-சமூகம்—காதல், கல்வி, தமிழ், பல்சுவைப் பகுதி என்னும் அறுவகைப் பகுப்புகளில் திரு. முத்துக் கண்ணன் அவர்கள் எழுதிய கவிதைகள் இந்நூலில் அடங்கியுள்ளன.

புரட்சிக்குயில் பாரதிதாசனுக்குப் பிறகு தன்னேயொரு குஞ்சுக் குயிலாக அறிமுகப் படுத்திக் கொள்ளும் இவரின் பாட்டுச் சுவையில் நாம் ஈடுபடும் இடங்கள் சில. காற்றே வா, மலேயிலே, திருநாள், கணக்கு, தேய்ப்பு போன்றவைகளே இதற்கு எடுத்துக் காட்டலாம்.

உழைத்துக் களைத்தார் உடற் சோர்வையும், சுடுசோற்றையும் ஆற்றிக் கொள்ள

'விசிறியைத் தாம்
கையெடுப்பார்
கைகள் சோரும்
விரைந்தோடிக் குறை தீர்க்கக்
காற்றே வாவா!

என்றிவர் பாடுவதில் உள்ள சமுதாயப் பார்வை பாராட்டுக் குரியது.

'மலையிலே' என்னும் கவிதை சென்னி குளத்தாரின் சிந்துப் பாட்டை நினைவூட்டுகிறது.

திரு. முத்துக் கண்ணனாரின் அடுத்த படைப்பு இதனினும் சுவையாய் அமையுமென எதிர் பார்க்கலாம்.

(அல்லி விழி-ஆசிரியர் கவிஞர். முத்துக் கண்ணன். வெளியீடு. கே. ஆர். நாராயணன், 131. பிராட்வே, சென்னை-1. பக்கம்-87. விலை ரூ. 1-50.)

—சேந்திஉடையநாதபுரம்
சீனிவாசன்

தாரா பயில்வான்

சிறுவர்க்கு ஏற்ற நூல் இது. இதில் சிறப்பாக ஓவியங்கள் அமைந்துள்ளன. கவிதைகள் பாணியில் விளக்கங் கொடுக்கப் பட்டுள்ளன. விலையும் மலிவு, பெரிய அளவு. கண்ணைப் பறிக்கும் வண்ணம். இன்னும் என்ன வேண்டும்?

குழந்தைகள் படங்களைப் பார்த்தே, விளக்கங்கள் சொல்கின்றன. அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கங்கள் இரண்டாம் பட்சமாகவே பயன்படுகின்றன. ஆக படங்களின் மீது அதிக கவனம் செலுத்தி, சிறப்பாக அமைத்துள்ள முறை பாராட்டத் தக்கதே,

தமிழ்க் குழந்தைகள் பார்த்துப் பழக்கப்பட்ட உருவங்களே, படங்களாகச் சித்தரிப்பது, இன்னும் பொருத்தமாகவும், குழந்தைகளை மேலும் ஊக்குவிப்பதாகவும் அமையும். ஆகவே இனிவரும் குழந்தை நூல்களை புதிய முறையில் அமைப்பது சிறந்த பயனை அளிக்கலாம். பொது நூலகங்களில் சிறுவர் பகுதியில் அவசியம் இருக்கவேண்டிய நூல் இது. பள்ளி நூலகங்கள் அனைத்தும் பல பிரதிகள் வாங்கி வைப்பது அவசியம். பணவசதியுள்ள பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு விலை கொடுத்தே இந்நூல்களை வாங்கித் தந்து, படிக்கும் பழக்கத்தை வளர்ப்பது அவசியம்.

தாரா பயில்வான். ஆசிரியர்: மி. ஸ்தேல். மஹ். தமிழில்: பூ. சோமசுந்தரம். வெளியீடு:புரோகிரஸ் பதிப்பகம், மாஸ்கோ. விற்பனை உரிமை: நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட். சென்னை-2. 24 பக்கம். விலை 60 பை.

வாளையின் சட்டம்

சிறுவர் நூல் இது. ருஷ்ய நாடோடிக் கதை படங்களுடன் தமிழில் சிறப்பாகச்சொல்லப்பட்டிருக்கிறது. வண்ணம் இன்னும் சிறப்பாயிருந்திருக்கலாம். படங்களின் தெளிவு போதாது. பள்ளி நூலகங்கள் பல பிரதிகள் வாங்குவது அவசியம். பெற்றோர், இது போன்ற படங்கள் மிகுந்த நல்ல சிறுவர் நூல்களை வாங்கித் தந்து, தங்கள் குழந்தைகளின் படிக்கும் பழக்கத்தை வளர்ப்பது அவசியம்.

பொது நூலகங்களில் சிறுவர் பகுதிக்கும், பள்ளி நூலகங்களுக்கும் ஏற்ற சிறுவர் நூல் இது.

வாலேயின் சட்டம். ஆசிரியர்: மி. புலாத்தோவ். தமிழில்: பூ. சோம சுந்தரம். வெளியீடு: புரோகிரஸ் பதிப்பகம். மாஸ்கோ. விற்பனை உரிமை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 24 பக்கம். விலை 70 காசு

ஏழு நிறப் பூ

சிறுவர்க்கேற்ற நூல் இது. வ. லோஸின் ஓவியங்கள் நன்றாயிருக்கின்றன.

இக்காலச் சிறுவர்கள் படங்களையே அதிகம் விரும்புகிறார்கள். படங்கள் நிறைந்த புத்தகங்களை குழந்தைகளிடம் கொடுத்ததில், அவர்கள் விளக்கங்களை ஆர்வத்துடன் படிப்பதில்லை. படங்களைப் பார்த்து, தங்களுக்குத் தோன்றிய விளக்கங்களையே சொல்லி மகிழ்கிறார்கள். ஆகவே படங்களை மிகுதியாக்கி விளக்கங்களை மிக மிகக் குறைந்த அளவில் தருவது அவசியம். அப்போது தான் சிறுவர் நூலின் பயன் மிகுதியாகும்.

ஷேன்யா என்ற பெண், ஏழு நிறப் பூக்களைப் பெற்ற விதத்தையும், அவற்றை அவள் பயன்படுத்திய விதமும் சுவையானது. கடைசிப் பூவை வித்யா உடம்பு நோகும்படி வாம் தா பயன்படுத்திய விதமும் கவனிக்கத் தக்கது. நீதி நிறைந்த கதை. பள்ளி, சிறுவர் நூலகங்களில் அவசியம் பல பிரதிகள் இருக்க வேண்டிய நூல் இது.

ஏழு நிறப் பூ. ஆசிரியர்: வலெந்தீன் கத்தாயெவ், தமிழில்: பூ. சோமசுந்தரம். வெளியீடு: புரோகிரஸ் பதிப்பகம். விற்பனை உரிமை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை. 24 பக்கம். 65 பை.

காலப்போக்கும் கல்லூரிப்போக்கும்

நம் நாட்டில் தற்காலக் கல்வி முறை பற்றியும், நிர்வாக முறை பற்றியும், மாணவர் சமுதாயத்திலிருக்கும் நிலைமை பற்றியும் இந்தச் சிறு பிரசுரத்தில் ஆராயப்பட்டிருக்கிறது. இரண்டு பெரிய கல்லூரிகளில் முதல்வர்களாயிருந்து பொறுப்போடு பணியாற்றும் கல்வித் துறையிலும் நிர்வாகத் துறையிலும் வல்லுனரான இரு பெருமக்கள் தம் அனுபவத்தையும் ஆற்றலையும் கொண்டு சிறந்த ஆலோசனைகளாக இப்பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வதாவது: ''நீண்ட நெடுங்காலமாகமாணவ உலகின் போக்கை உற்று நோக்கி விவாதித்து வந்தோம்; அவ்விவாதங்களை, மாணவர் முகாம், ஆசிரியர் முகாம், மாணவர் பேட்டி, பெற்றோர் கூட்டம் என்று பலப்பட அமைத்துக் கலந்தோம்...எங்கள் எண்ணச் செடியில் மலர்ந்த முதல் மலர் இது. அடுத்து மலர்கள் மணம் பரப்ப இருக்கின்றன''.

விற்பனைக்காகத்தயாரிக்கப்படாமல், பொதுமக்களின் அறிவுக்காகவே வெளியிடப்பட்ட இந்தக் கருத்துக் கோவை மிகவும் பாராட்டப்படவேண்டிய முயற்சியாகும்.

ஆசிரியர்கள்: தவத்திரு இராசநாயகம், க. ப. அருணாசலம். வெளியீடு : தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை.

உறங்காத கண்கள்

எம். வி. வெங்கட்ராம் மிகப் பழைய நல்ல எழுத்தாளர். சிறுகதைத் துறையில் கு. ப. ராவைப் பின் பற்றி அவர் பாணி

யிலேயே எழுதி வந்தவர். ஆண் பெண் என்ற பால் உறவு அடிப்படையில் மிகச் சிக்கலான சந்தர்ப்பங்களையும் நல்ல நாசூக்காகக் கையாள்வதில் வெங்கட்ராம் வெற்றி பெற்றவர். இவருடைய நல்ல சிறந்த கதைகள் பதினெட்டைக் கோத்து ஒரு நூலாக வெளியிட்டிருக்கின்றனர் கலைஞன் பதிப்பகத்தார். பெரும்பான்மையானகதைகளும் இருபத்தைந்து முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் பத்திரிகைகளில் வெளி வந்தவை ஆனால், பதிப்பகத்தார் விவரம் ஒன்றும் குறிப்பிடவில்லை. முதலாவது கதையின் தலைப்பையே ''உறங்காத கண்கள்'' என்று நூலுக்கும் பெயரிட்டிருக்கிறார்கள.

எல்லாக் கதைகளுமே எம். வி. வெங்கட்ராமின் எழுத்துக் கொள்கையைப் புலப்படுத்துகின்றன. கதைகளின் கருப்பொருள் பெரும்பான்மையும் ஒரே மாதிரியிருந்தாலும், கையாளும் உத்தியும் பாத்திரப் படைப்பும் சிறப்புடனிருக்கக் காணலாம். ''வேலைக்காரி தூங்குகிறாள்; நாய் காக்கிறது'' என்ற கதை ஓர் அருமையான படைப்பு. ''பனிமுடிமீது ஒரு கண்ணகி'', ''அழகி'' என்ற கதைகள் சிந்தனையைத் தூண்டும் சிறந்த கற்பனைச் சித்திரங்கள்.

(சிறுகதைகள்) — ஆசிரியர்: எம். வி. வெங்கட்ராம்; கலைஞன் பதிப்பதிகம், சென்னை–17. விலை ரூ. 4-50.

—சிவபாத சுந்தரம்

சின்னக் கமலா

பிரபு என்ற ஓவியர் அப்பாத்துரைக்கு சிலை செய்ய அரசாங்கத்திடமிருந்து வரும் அழைப்பை ஏற்றுக் கொள்கிறார். அப்பாத்துரைக்கு நினைவுச் சின்னம் ஏதும் வைக்கக் கூடாது என்பதற்குப் பாடுபடும் ஒரு பெரிய கூட்டம் சின்னக் கமலாவை அனுப்பி பிரபுவை சிலை செய்யாதவாறு தடுக்க அனுப்புகிறது. ஏனெனில் அப்பாத்துரை மனித குலத்திற்கு பெருந்தீங்கு செய்தவர்—பல குடும்பங்கள் மாண்டு போகக் காரணமாக இருந்தவர்—என்று அந்தக் கூட்டம் நம்புகிறது. ஆனால் உண்மையே வேறு. இதுவரையில், சின்னக் கமலா யாரை கொடுமையான காரியம் செய்தவர் என்று நினைத்து—அவருக்கு நினைவுச்சின்னம் எழுப்பக்கூடாது என்று பாடுபட்டு வந்தாளோ—அந்த அப்பாத்துரை குற்றமற்றவர். உண்மையில் குற்றவாளி தன் தந்தையே என்பதை உணர்கிறாள். உடனே பிரபுவுக்கு உதவுகிறாள் சிலைசெய்ய. மனைவியாகவும அவருக்கு ஆகிறாள். சுபம்...சுபம் முந்நூற்று இருபதிரண்டு பக்கங்களில் நாவல் முடிவடைகிறது.

சின்னக்கமலாவை பாதி சமூகக் கதையாகவும் பாதி மர்மக் கதையாகவும் ஆசிரியர் எழுதியிருக்கிறார். கீழே வைக்க முடியாமல் ஒரே மூச்சில் கதையைப் படித்து விடலாம். கதை எந்த இடத்திலும் நிற்கவில்லை. தடுமாறவிலலை. 'ஜிலுஜிலு' வென்று மெயில் மாதிரி போகிறது. காதல், சோகம், கொடூரம், நகைச்சுவை எல்லாம் மாறிமாறி வருகிறது. கடைசியில் கதை சினிமா மாதிரி முடிவடைகிறது.

ஆசிரியரிடம் திறமை இருக்கிறது. ஆனால் அது வெற்றிகரமான தொடர்கதைஎழுதுவதற்கு மட்டுமே பயன்பட்டிருக்கிறது.

மொத்தத்தில் வெற்றிகரமான தொடர்கதை 'சின்னக் கமலா'.

ஆசிரியர்: ரா. கி. ரங்கராஜன், வானதி பதிப்பக்கம்: 322 பக்கங்கள். விலை: ரூ. 6-00.

—எஸ் கே.

புதிய புத்தகங்கள்

657. கவிஞர் கண்ட அண்ணா V4411 y7NO9 wl K9

தொகுப்பு ஆசிரியர்: மூவேந்தன். வெளியீடு: பூங்கொடிப் பதிப்பகம். சென்னை-4. ஜூன் 1969. பக்கம்: 128. விலை: ரூ. 3-00 வகை: அண்ணா பற்றி - கவிதை

658. எங்கே நிம்மதி O—, 3NRA, Y K9

ஆசிரியர்: பி. எல். ராஜேந்திரன். வெளியீடு: பூங்கொடிப் பதிப்பகம், சென்னை-4. ஜூன் 1969 பக்கம்: 196 விலை: ரூ. 4-00 வகை: நாவல்

659. முல்லை மாடம் O—, 2N IS, m. K9

ஆசிரியர்: ஐசக் அருமைராசன். வெளியீடு: ஐசக் அருமைராசன் 390, இராம வர்மபுரம், நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டம், ஜூன் 1969. பக்கம்: 214 விலை: ரூ. 4-00 வகை: கவிதை நாடகம்

660. அறிவு விளக்கு O—, 3N TH, A K9

ஆசிரியர்: நாகை தருமன். வெளியீடு: தமிழ்ச் சோலை. விற்பனை உரிமை: பூங்கொடிப் பதிப்பகம், சென்னை-4. ஜூன் 1969. பக்கம் 100. விலை: ரூ. 2-00 வகை: சிறுவர் இலக்கியம்-கதை

661. குழந்தை மருத்துவம் L9C -K9

ஆசிரியர்: எஸ். சிதம்பரதாணு பிள்ளை. வெளியீடு: சித்த மகுட பிரசுரம், 33-6, கஜபதி நாயுடு தெரு, செனாய்நகர், சென்னை-30 1969, பக்கம் 100. விலை ரூ. 1-50. வகை: குழந்தை மருத்துவம்.

662. தேவதைகளும் சொற்களும் O-,3N32,D K9

ஆசிரியர்: நா. பார்த்தசாரதி, வெளியீடு: நவபாரதி பிரசுரம், 23\442, சுக்கிரவாரப் பேட்டை, கோயம்புத்தூர்-1. ஜூன் 1969. பக்கம்: 160. விலை ரூ. 3-00. வகை: சிறு கதைத் தொகுதி.

663. புதிய பார்வை O-, 36 N 32, P K9

ஆசிரியர்: நா. பார்த்தசாரதி, வெளியீடு: நவபாரதி பிரசுரம் கோயம்புத்தூர்-1. ஆகஸ்டு 1969. பக்கம்: 160. விலை ரூ. 3-00 வகை; கட்டுரைத் தொகுதி.

664. சங்கு சுட்டாலும் O-, 3N 20, S K9

ஆசிரியர்: க. நாராயணன், வெளியீடு: தமிழ்ப்பண்ணை, சென்னை-17. ஆகஸ்டு 1969. பக்கம்: 232. விலை ரூ. 4-50 வகை: நாவல்.

665. நீர்க்கோடுகள் O-,3NRA, N K9

ஆசிரியர்: ஸி. ஆர். ராஜம்மா, வெளியீடு: தமிழ்ப்பண்ணை, சென்னை-17. ஆகஸ்டு 1969. பக்கம்: 208. விலைரூ. 4-00 வகை: நாவல்.

666. சிவப்பு ரோஜா O-, 3NGA, S K9

ஆசிரியர்: பி. சி. கணேசன், வெளியீடு: தமிழ்ப்பண்ணை, சென்னை-17. ஆகஸ்டு 1969. பக்கம்: 144. விலை ரூ 3-00 வகை: நாவல்.

667. நானே நீதிபதி O-, 3NO4, N K9

ஆசிரியர்: தமிலன். வெளியீடு: தமிழ்ப்பண்ணை, சென்னை-17 செப்டம்பர் 1969. பக்கம்: 208. விலை ரூ. 4-00. வகை: நாவல்.

668. திருவள்ளுவர் காட்டும் அரசு O-, 1C 5: g K9

ஆசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார். வெளியீடு: தமிழ்ப் பண்ணை, சென்னை-17. 1969. பக்கம். 72 விலை ரூ.1-25. வகை: வள்ளுவம்-திறனாய்வு.

669. ஆரத்தி O ,3 ,A -K9

ஆசிரியர்: தாராசங்கர் பானர்ஜி. தமிழில்: ஸரஸ்வதி ராம்நாத் வெளியீடு: தமிழ்ப்பண்ணை, சென்னை. செப்டம்பர் 1969. பக்கம் 192. விலை ரூ. 3-75. வகை: நாவல்.

670. இரவின் கரங்கள் O152, 3NAB, I -K9

ஆசிரியர்: கே. ஏ. அப்பாஸ். தமிழில்: முக்தார். வெளியீடு: தமிழ்ப்பண்ணை, சென்னை-17. ஆகஸ்டு 1969. பக்கம்: 192. விலை ரூ. 3-50. வகை: நாவல்.

671. நீதி நெறிக் கதைகள் O-, 3NDE,N K9

ஆசிரியர்: நெ. சி. தெய்வசிகாமணி. வெளியீடு: தமிழ்ப்பண்ணை சென்னை-17. ஆகஸ்டு 1969. பக்கம்: 60. விலை ரூ.1-25. வகை: கதைகள்.

672. விதியை வெல்லுதல் OIII,6M64, M -K9

ஆசிரியர்: James Allen. தமிழில்: என். கே. வேலன் வெளியீடு: திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-1. ஜூலை 1969. பக்கம்: 88. விலை: ரூ. 1-75. வகை: கட்டுரைகள்.

673. கொசு ஒழிப்பு D8 -K8

ஆசிரியர்: க. வ. முத்தையா. வெளியீடு: தி. தெ. சை. நூற் பதிப்புக் கழகம், சென்னை-1. நவம்பர் 1968. பக்கம்: 96. விலை ரூ. 2-00. வகை: கொசு ஒழிப்பு.

674. Morning and Evening Thoughts OIII,6 M 12, M K8

ஆசிரியர்: James Allen. வெளியீடு: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-1. 1968. பக்கம்: 80. விலை: ரூ. 2-50. வகை: கட்டுரை (ஆங்கிலம்)

675. Man: King of Mind, Body and Circumstances OIII,6M64, MI K8

ஆசிரியர்: James Allen. வெளியீடு: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் சென்னை-1. செப்டம்பர் 1968. பக்கம்; 72. விலை: ரூ. 2-50 வகை: ஆங்கிலக் கட்டுரை.

676. அக்கினி சாட்சி O-, 3N28, A K8

ஆசிரியர்: பூவை எஸ். ஆறுமுகம். வெளியீடு: பத்மஜோதி பிரசுராலயம், 53-56, பவழக்காரத் தெரு, சென்னை-1. டிசம்பர் 1968. பக்கம் 110. விலை: ரூ. 3-00. வகை: கதை.

677. தாய் O ,3 ,T -K9

ஆசிரியர்: சரத்சந்திரர். தமிழில்: ஆர். சண்முக சுந்தரம். வெளியீடு: வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17. ஆகஸ்டு 1969 பக்கம்: 72. விலை: 1-25. வகை: கதை.

678. அறிஞர்களின் வாழ்விலே zG -K9

ஆசிரியர்: தே. ப. பெருமாள். வெளியீடு: வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17. ஆகஸ்டு 1969. பக்கம்: 104. விலை ரூ. 1-75. வகை: காந்தீயம்.

679. கம்ப ராமாயணக் கதைகள் O-, IF , K w3 K9

ஆசிரியர்: சு. லலிதாம்பாள். வெளியீடு: வானதி பதிப்பகம், தி. நகர். சென்னை-17. ஜூலை 1969. பக்கம்: 126. விலை ரூ. 2-00 வகை: கம்பராமாயணம் - கதையாக.

Edited by : KUYILAN (G. Ramalingam)
and Printed by Kondah. Kasi. Seetharamon at Sree Agastya Printers
85, III Main Road, C.I. T.Nagar (Ext.) Madras-35
For the Publishers "Bibliopole"
14, Thanikachalam chetty Road; Madras-17.